ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே ஶரணம்

# ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம்

பராங்குஶ திருஅவதார ௵5108 ஸர்வதாரி௵ கார்த்திகை 18, 3–12–08

க்ரந்த பரிபாலந ட்ரஸ்ட் வெளியீடு

FOR PRIVATE CIRCULATION ONLY



ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம்।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம்।।
जीवोज्जीवनसङ्कल्पं हरेः पूर्णं विधित्सुकाम्।श्रियं सत्याशिषं कुर्वत्सदाचार्यपरम्परा ।।
यावत् , विजयतां तावत्सीमाति क्रान्तवैभवा ।श्रीशैलेशदयापात्रनाम्नीयं पत्रिका शुभा ।।

ஆசிரியர்: R.ரகுராமன் (பாலாஜி)9994606427
24/71,புத்தூர் அக்ரஹாரம் திருச்சி–620 017.
துணையாசிரியர்: K.ஆராவமுதன் (98942 12038)

# பொருளடக்கம்

**மலர் 1 இதழ் 8** **பக்கம்**


| | |
|---|---|
| ஸுதர்ஸனர் வைபவ மலர் | 1–35 |
| பரகாலகவியின் பத்தாம்பத்து அநுபவம் | 36–39 |
| நம்பிள்ளையின் திருநாவீறு | 40–44 |
| வரவரமுநி திநசர்யா (உரையுடன் கூடியது) | 45–48 |




அன்பர்களே,

இம்மாதம் கார்த்திகை ஸ்வாதியன்று அடியேனுடைய ஜ்ஞாநாசார்யரான ஸுதர்ஸனர் ஸ்வாமிக்கு 85வது திருநக்ஷத்ரம் தொடங்குகிறது. ஆதலால் இம்மாதமலர் ஸுதர்ஸனர்ஸ்வாமி விஷயமாக வெளிவருகிறது. ஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி, ஸப்ததி, ஸதாபிஷேக மலர்களிலிருந்து சில பகுதிகள் அளிக்கப்படுகின்றன.

ஆசிரியர்.

ஸ்ரீ:

## வடபுதுவைவேயர்

## அம்மாள் ஸ்ரீ.உ.வே.ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, மேலத்திருமாளிகை, திருவெள்ளறை

ஆண்டாளுக்குத் தனியன் இடாநின்ற திருக்கண்ணமங்கையாண்டான், 'அல்லிநாள் தாமரை மேல்' என்கிற தனியனிலே பெரியாழ்வாரை 'தென்புதுவை வேயர்' என்று குறிப்பிட்டுள்ளார். 'வலக்கண்' 'வலக்கை' என்றபோதே இடக்கண்ணும், இடக்கையும் இருப்பது எவ்வாறு தேறுகிறதோ அவ்வாறே 'தென்புதுவை' என்ற மாத்ரத்தாலேயே வடபுதுவையும் ஒன்றிருக்க வேணும் என்பது தேறும். ''வடமொழி மறை என்றது தென்மொழி மறையை நினைத்திறே'' என்பது ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தி. தென்புதுவையான ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வடக்கேயுள்ளதாய், ஸ்ரீவில்லிப்புத்தூரைப்போல் புரஸ்சூடர்களால் பொலிவு பெற்றதாய், கோழியென்னும் திருவுறையூருக் கணித்தாய் ஸ்ரீ.உ.வே.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியின் திருவவதார ஸ்தலமாய் விளங்காநிற்கும் புத்தூரே 'வடபுதுவை' என்னத்தட்டில்லை.

ஸ்வாமி, பெரியாழ்வாரைப்போலே சோதி நன்னுளிலே பூர்வசிக குலத்திலே அவதரித்துள்ளார். எந்தை தந்தை தந்தை தந்தை தம்மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி, வந்து வழிவழியாட்செய்த பெரியாழ்வாரைப்போலே இவரும் பாட்டனுருக்கு முப்பாட்டனுர் தொடங்கி எம்பெருமானுக்கே ஆட்செய்து போந்த குலப்பெருமையை உடையவர். பெரியாழ்வாரோ மாலாகாரர். நம்ஸ்வாமியின் திருவம்ஶமோ 'பூக்காரர் திருவம்ஶம்'. வேண்டிய வேதங்களோதி பரத்வநிர்ணயம் செய்து போந்த பெரியாழ்வாரைப்போல் நம் ஸ்வாமியும் விஷ்ணுசித்தவிஜயத்தில் வேதவாக்யங்களைக் காட்டி, எம்பெருமானின் பரத்வத்தைப் பரக்கப்பேசியுள்ளார். சங்கப்பாடல் கொண்டும் திருமாலின் பரத்வத்தை நிலைநாட்டி, பெரியாழ்வாரையும் விஞ்சி விளங்குகிறுர் நம் ஸ்வாமி. பெரியாழ்வார் 'இந்திரனேடு பிரமன்' என்று தொடங்கி, திருவெள்ளறை எம்பெருமானுக்கு நாவால் காப்பிட்டார். நம் ஸ்வாமியோவென்னில் திருவெள்ளறை எம்பெருமானின் அர்ச்சைத்திருமேனிக்கு வருடந்தோறும் ஐப்பசியில் ஒரு ஞாயிறன்று (புனுகு) காப்பிட்டு வருகிறுர்.

பெரியாழ்வார் தம்மெதிரில் ஸேவை ஸாதித்த பரமனுக்கு 'என்வருமோ' என்றஞ்சிப் பல்லாண்டு பாடினுர். இவரோ அர்ச்சாரூபமாக ஸேவை ஸாதிக்கும்

எம்பெருமான்களுக்கு இதர மதஸ்தர்களால் விளையும் தீங்குகளைத் தீயினில் தூசாக்கி வருகிறார். (சோலைமலை வழக்கு இத்யாதிகளே சான்று.) ஆழ்வார், க்ருஷ்ண க்ருத்யங்களை அநுபவித்தும், அநுபவிப்பித்தும் ஆநந்தப்பட்டார். ஸ்வாமியும் க்ருஷ்ண க்ருத்யங்களை (பெரியவாச்சான்பிள்ளையின் வ்யாக்யாநுதிகள்) அநுபவித்தும், அநுபவிப்பித்தும் ஆநந்தப்பட்டு வருகிறார்.

''ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் பர்வத பரமாணுவோட்டை வாசிபோரும்'' என்றார் பெரியவாச்சான்பிள்ளை. பரத்வ நிர்ணயம் செய்து போரும் ஸ்வாமிக்கும் அதைச் செய்யத் தயங்கும் மற்ற வித்வான்களுக்கும் அத்தனை வாசிபோரும் என்பதில் ஸந்தேஹலேஶமும் இல்லை. 'மெய்ந்நாவன் மெய்யடியான்' என்று பெரியாழ்வார் தாமே கூறியபடி, ஸ்வாமியும் உண்மையை உரைக்கத் தயங்காத நாவினராய், உண்மையான வைணவத் தொண்டராய் விளங்கி வருகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆழ்வார், ''கேசவா புருடோத்தமா கிளர்சோதியாய் குறளா என்று பேசுவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே'' என்று தாம் அடியார்களுக்குப் பரதந்த்ரராய் இருக்கும்படியை அறிவித்துள்ளார். ஸ்வாமியும் திருமாலடியார்கள் இவரது திருமாளிகைக்கு வந்தால் இஷ்டப்படி இருந்து விருந்துண்டு, திருமாளிகையையே ஆண்டு அநுபவித்துச் செல்லும்படி அடியவர்களிடம் பரதந்த்ரராய் விளங்கி வருவது கண்கூடு.

இப்படிப் பலபுடைகளாலே 'அபிநவ விட்டுசித்தரோ' என்னும்படி விளங்கும் நம்ஸ்வாமியும் பெரியாழ்வார் ''புதுவையர்கோன்'' என்றே வ்யவஹரிக்கப்பட்டதுபோல் 'புத்தூர்ஸ்வாமி' என்றே அழைக்கப்படுகிறார். இப்படி வடபுதுவை வேயராக விளங்கிவரும் நம்ஸ்வாமி ஶதாப்திகளும் கண்டருளி, கொண்டபெண்டிர் மக்களுடன் பல்லாண்டுகள் வையம் மன்னி வீற்றிருக்கும்படியாக அருள்புரியவேணும் என்று எங்களாழ்வானுடையவும், பங்கஜாநாயிகா ஸமேத புண்டரீகாக்ஷனுடையவுமான திருவடிகளிலே ப்ரார்த்தித்து நிற்கிறேனடியேன்.

**ஸ்ரீ.உ.வே.குமாரவாடி சே.ராமாநுஜாசார்யர்ஸ்வாமி, சென்னை.**

**(ஸ்ரீமத் பரமஹம்ஸ எம்பார் ஜீயர் ஸ்வாமி பூர்வாஶ்ரமத்தில் எழுதியது)**

ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஶனம் போன்றே, அதற்கு முன்னரும் பின்னரும் பல இதழ்கள் வெளிவந்தது உண்டு. ஆயினும் ஒரு குடும்ப சொத்திலிருந்து, 'லாபநஷ்டம்' பாராமல் கொள்கைப் பிரசாரத்துக்காக, கடுமையான பல எதிர்ப்புக்களையும் ஏற்றுப்போராடி, தாக்குப் பிடிக்கும் தனிச்சிறப்பு 'ஸுதர்ஶனம்' ஒன்றுக்கே உண்டு எனலாம்.

புலிக்குப் பிறந்தது பூனையாகாமல் தந்தையை விஞ்சியவராய் ''விடுத்த

திசைக் கருமம் திருத்தி'' வருகிறுர் புத்தூர் வக்கீல் ஸ்ரீ.உ.வே.கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி. ஸ்ரீவைஷ்ணவப்பயிர் புத்துயிர்பெற்றுத் தழைத்தோங்கும் வகையில், களையெடுத்துக் கைகொடுத்து வருகிறுர். இக்காலம், கோயில் கைங்கர்யம் கூழாட்படும் தொழிலாகவும், வேதாந்தம் விற்பனைச் சரக்காகவும், ஸ்ரீவைஷ்ணப்பிரசாரம் புகழ், பொருள், பூசையின் பொருட்டாகவுமே மாறிவரும் அவலநிலையில் தீவிரமும், தியாக உணர்வும், தீரமும் கொண்டு ஸுதர்ஸனர் ஆற்றிவரும் பணிகள் போற்றுதற்குரியன.

ஸுதர்ஸனர் தாம் பதிப்பிக்கும் நூல்களுக்கு எழுதும் ஆராய்ச்சி முன்னுரைகள் அவ்வப்போதான பதிப்புரைகள், விஷயஸூசிகை அதாவது பொருளடக்கத்தில் காட்டப்படும் அரிய விவரங்கள்–மூல, உரை நூல்கள் (வியாக்யானம்) இவற்ருேடு அரும்பத உரைகள், அடிக்குறிப்புக்கள், அவசியமான ஒப்புமை விளக்கங்கள், நூலில் மேற்கோள் சுலோகம், சுருதிவாக்கியம் போன்றவற்றுக்குப் பிரமாணத்திரட்டுப் பகுதியில் பதவுரை, பிரமாண வரிசைக்குறிப்பு எண்கள், ஸங்கதி (தொடர்பு) –விவரம், இடையிடையே பாடபேதங்கள் போன்ற அனைத்தும் தந்து அருமையான நூற்பணிசெய்து சிறந்த வெளியீட்டாளராக விளங்குகிறுர் ஸுதர்சனர்.

**ஸ்ரீ.உ.வே.அம்மாள் ஸௌம்யநாராயணசார்யர்ஸ்வாமி,**
**மேலத்திருமாளிகை திருவெள்ளறை**

''மனைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார் தொழுதாரத் தோள்'' (இர.திருவ.42) என்கிறபடியே ஸம்ஸார ஸுகத்தில் நசையற்ற நம் ஸ்வாமிக்கு ''தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது'' (நான்.திருவ.63) என்கிறபடியே பகவத்பரமான காரியங்களே நித்யக்ருத்யமாய்ச் செல்லுகிறது.

சோதி நன்ளுளில் உதித்தவராதலால் பெரியாழ்வாரைப்போல் 'பரஞ்சோதி திருமாலே' என்பதை நிலைநாட்டி, எழுத்துலகில் ஜகஜ்ஜோதியாய் விளங்குகிறுர் ஸ்வாமி. ஸ்வாமியின் எழுத்தில் வாக்யராசிகள் பரமவிலக்ஷணமாயிருக்கும். அவ்வப்போது மஹாவாக்யங்கள் பல அமையும். ஆனுல் அநந்விதமாயிரா. ஸ்ரீபாஷ்ய மஹாவாக்யங்கள் போன்று பரமகம்பீரமாயும் எளிதில் புரியும் வண்ணமும் விளங்கும்.

ஸுதர்ஸனர் எதிரிகளை வாய்மாளப் பண்ணும்விதம் விலக்ஷணமானது. எதிரிகள், கண்டவற்றை எழுதி 'பதில் சொல்லிவிட்டோம்' என்று பேர்பண்ண முடியாதபடி, கேள்விக் கணைகளைத் தொடுத்து விடுவார் ஸ்வாமி. எதிரிகளும் விடையிறுக்ககில்லாமல் 'குழமணிதூரமே' பாடி மௌனம் சாதிக்கவே நேரும்.

கல்வி, செல்வம், குலம் ஆகிய மூன்றும் ஸ்வாமி பக்கல் புஷ்கலமாயிருந்தும் ஈஷத்தும் செருக்குக்கொள்ளாமல் விளங்குமவர்.

பரத்வத்துக்குறுப்பான பெருமை பெற்றிருந்தும் அதை நீக்கி ஸௌலப்யத்தின் எல்லையில் நின்று கோஷ்டிகளில் ப்ரகாஶிப்பார். ''மத்த: ப்ரத்யவர: கஶ்சித் நாஸ்தி ஸுக்$_3$ரீவ ஸந்நிதௌ$_4$ள'' (ஸுக்$_3$ரீவ ஸேனையில் என்னைவிடச் சிறியவன் எவனும் இல்லை) என்று கூறிய அனுமனைப்போல் வித்வத்கோஷ்டியில், ''அடியேன் கடையன்'' என்று கூறி நைச்யம் பாவிக்கும் பண்பாளர். ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏதேனும் குற்றம் செய்யினும் ''இராமானுசனை மேவும் நல்லோர் எக்குற்றவாளர் எதுபிறப்பு ஏதியல்வாக நின்றோர் அக்குற்றம் அப்பிறப்பு அவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே'' (இராமானுச 26) என்று அருளிச்செயலை அநுஸந்தித்து அக்குற்றத்தை குணமாகக்கொள்ளுமவர். ஸ்வாமியின் திருவுள்ளப்பாங்கு இங்ஙனேயிருக்கையாலே 'ப்ரஹ்மாவாய் இழந்து போதல், இடைச்சியாய்ப் பெற்று விடுதல்' என்றபடி பெரிய பெரிய ஸிம்ஹங்களுக்கு விளங்காத ரஹஸ்யார்த்தங்களை ஸ்வாமிக்கு விளங்கவைக்கிறான் எம்பெருமான். ஸ்வாமியின் கைவல்யஸித்தாஞ்ஜனம், வார்த்தாமாலை விவரணம் முதலான க்ரந்தங்களைக் காணும் நல்லோர்கள் இதனை 'தத்த்வஸ்திதி' என்றே கூறுவர்கள். குணம்திகழ் கொண்டலான ஸ்வாமியின் கலங்கலில்லாப் புகழும் பெருமையும் யான் சொல்லும் நீர்த்தல்ல.

### ஸாரார்த்த சொல்லழகர் ஸ்ரீ.உ.வே.ஶதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி

'ஸுதர்ஶநம்' என்கிற சொல், 'நல்ல அழகுள்ளது' என்னும் பொருள் கொண்டதாகிறது. நம் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தம் நல்ல அறிவை உண்டாக்குவதால், அழகுள்ளதாகி 'ஸுதர்ஶநம்' என்னப்படுகிறது. அதே போல எம்பெருமான் வலது திருக்கரத்திலுள்ள சக்கரப்படையும் பார்க்க அழகாயிருப்பதால் ''ஸுதர்ஶனம்'' எனப்படுகிறது. இந்த ஸுதர்ஶனத்தைக் கையிலுடையவனும் நல்ல அழகுள்ளவனாய் ஸுதர்ஶநனாகிறான். எம்பெருமான் திருக்கரத்தில் ஸுதர்ஶநம் சத்ருக்களை அழிக்குமதாய், அதே ஸமயம் எம்பெருமானடியார்களுக்குத் தோளில் ஆசார்யனால் ஒற்றப்பட்டு அவர்களையும் ஸுதர்ஶநர்கள் –மிக்க அழகுள்ளவர்களாக்குகிறது. இதே போல் ஸ்ரீ.உ.வே.எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரை ஆசிரியராகவுடைய ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶந பத்திரிகையும், அவரையும் ஸுதர்ஶநராக்கி, தன்னில் திகழும் கட்டுரைகளால் வைஷ்ணவ த்வேஷிகளின் அஜ்ஞாந அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களைப் போக்கி அவர்களையும் அநுகூலர்களாகவோ, உதாஸீநர்களாகவோ ஆக்கவல்லதாயும், அதே ஸமயம் ஸ்ரீவைஷ்ணர்களின் கையில் திகழும்போது அவர்களுக்குத் தம் ஸம்ப்ரதாயார்த்தங்களைத் தெளிவிக்கும்போதும் அவர்களையும் ஸுதர்ஶநர்கள் – நல்ல அழகுள்ளவர்களாக ஆக்குகிறது. இத்தகைய பத்திரிகையால் இதன் ஆசிரியரும் ஸுதர்ஶநராகிறார்.

ஸுதர்ஶநமும் ஸுதர்ஶநரும் ஸ்ரீவைஷ்ணவ உலகுக்குத் தொண்டு செய்துகொண்டு பல்லாண்டு வாழ்வார்களாகவென்று வாழ்த்துகிறோம்.

**பண்டிதபூஷணம் ஶாஸ்த்ரவிஶாரத, மத்வஸ்ரீ எம்.ராமாராவ்**

ஸ்ரீஸ்வாமியின் அரிய பெரிய குணாதிசயங்களையும், ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள ஆழ்ந்த புலமையையும் ஸம்பூர்ணமாக வர்ணிக்கமுடியாது. வைஷ்ணவத்தையும் ஸனாதந தர்மத்தையும் பரப்புவதே தமது ஸ்வதர்மம் எனக்கொண்டு, அவற்றிற்கு விருத்தமாகக் கூறுபவர்களை அவர்கள் யாராயிருந்தாலும் சரி தயாதாக்ஷிண்யமின்றி ''अयुक्तं तृणवत् त्याज्यं अप्युक्तं पद्मजन्मना'' (பிரமனே கூறினாலும் ப்ரமாணத்திற்குப் புறம்பானது புல்லைப்போல தள்ளத்தக்கது) என்றபடி சதச: கண்டிப்பதில் அஞ்சாநெஞ்சம் படைத்தவர். இது போற்றத்தக்கது. ஏனெனில் இது மதாசார்யர்கள் கையாண்டு வரும் பரபக்ஷநிராகரண பூர்வக ஸ்வபக்ஷ ஸ்தாபநம் என்ற கொள்கையைப் பின்பற்றுவதேயாகும். மேலும் கூர்மபுராணத்திலுள்ளது.

अन्यथोपासका ये तु तमोऽन्धं यान्त्यसंशयम् । ततोऽधिकमिमं व्यक्तं तेषां अनिन्दका:।।
तस्मात् यथास्वरूपं तु नारायणमनामयम्। अयथार्थस्य निन्दां च ये विदु: रे हि सज्जना:।।

(மித்யா ஞானத்தினால் பகவானை உபாஸிப்பவர்கள் கண்ணைக் குருடாக்கும் தமஸ் என்ற நரகத்தை அடைவர்; ஸந்தேஹமில்லை. அவர்களை நிந்திக்காதவர்கள், அவர்கள் அடையும் நரகத்தைவிட கோரமான நரகத்தை அடைவர். ஆகையால் நல்லோர்கள் ஸ்ரீமந்நாராயணனை உள்ளபடி அறிந்து உபாஸிப்பதுடன் மித்யாஞானிகளை நிந்திக்கவும் வேண்டும்.) இங்கு ஓர் வினா எழலாம். யதார்த்த ஞானி, மித்யாஞானியைவிடச் சிறந்தவனல்லவா! அவன் மித்யாஞானியை நிந்திக்காத சிறு குற்றத்திற்காக அவனுக்கு மித்யாஞானியின் தண்டனையைவிடப் பெரிய தண்டனையா? ஆம்.மித்யாஞானியைக் கண்டிக்காவிடில் ''अप्रतिषिद्धं तु अनुमतं स्यात्'' (கண்டிக்கப்படாதது அனுமதிக்கப்பட்டதாகிறது.) என்றபடி. அந்த மித்யாஞானத்தை நாம் சரி என்று ஒப்புக்கொண்டதுபோல் ஆகும். ஸ்ரீஸ்வாமி அவர்களைக் கண்டித்துவருவது ஶாஸ்த்ரீயமாகும்.

**ஸ்ரீ.உ.வே.திருவேங்கடம்ஸ்வாமி, மேலத்திருமாளிகை, திருவெள்ளறை.**

இச்சகத்தோர் வாழவந்த சக்கரக்கை மாயனோ?
அச்சமின்றி யன்றுரைத்த விட்டுசித்த வீரனோ?
எச்சமின்றி யன்றுசொன்ன சக்ரவர்த்தி சூரியோ?
நச்சலர்ந்த நாகமன்னோர் நாசமாக்கும் கண்ணனே.

(ஸுதர்ஶநரை இன்னாரென்று நிஶ்சயிக்கமாட்டாமல் பலபடியாக ஶங்கிக்க நேர்கிறது இதில். ஜகத்ரக்ஷண தீக்ஷிதனான ஸர்வேஶ்வரன் இவ்வுலகிற்கு ஞானமுதம் அளித்து ரக்ஷிக்கத்திருவுள்ளம் கொண்டவனாய் ஸ்வாமியாக

அவதரித்தானோ? அன்றியே அன்று பாண்டியன் ஸபையில் எம்பெருமானின் பரத்வத்திற்குக் கொத்தை வாராதபடி, வேண்டிய வேதங்கள்ஓதி, துணிவுடன் 'எம்பெருமானே பரன்' என்று நிலைநாட்டிய த்விஜகுல திலகரான பெரியாழ்வாரோ? இவர், அன்றியே, நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் ஒன்று விடாமல் அனைத்துக்கும் அமுதமன்ன வ்யாக்யானம் அருளிய வ்யாக்யான சக்ரவர்த்தியாம் க்ருஷ்ணஸூரியெனும் பெரியவாச்சான் பிள்ளையோ? விஷம் பொருந்திய நாகத்தின் தன்மைபெற்ற தீயசமயக்கலகரை நிரஸித்தருளும் க்ருஷ்ணஸ்வாமி அய்யங்காரை இன்னுரென்றறியேன்.)

கோழியரு காருமொரு புதுவைநகர் வாழி
ஏழுலகு மோங்குபுகழ் கிருஷ்ணசாமி வாழி
வாழியவர் தாளடையும் சீடரவர் தாமும்
வாழியவ ராழியுடன் ஊழிபல வாழி.

(ஸ்வாமியின் அவதார ஸதலத்திற்கும், ஸ்வாமிக்கும், ஸ்வாமியின் சீடர்க்கும், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஸனம் பத்திரிகைக்கும் பல்லாண்டு பாடுகிறது இதில்.)
(கோழி–உறையூர்)

சோதிதன்னில் சோதிகாட்டச் சோதிவந்த சோதியே
ஆதிநாதன் வேதம்சீதை கீதமோடுகீதையும்
கோதிலாத வேதமோடு போதனைகள் வாழவே
பாதிகண்ட மேதைநீயும் மீதியாயுள் கண்டிடே.

(ஒளிமயமான ஸுதர்ஸந பத்திரிகை மூலமாக, பரஞ்சோதியை உலகினர்க்குக் காட்டுவதற்காக சோதி நக்ஷத்திரத்தில் அவதரித்த ஒளி விளக்கான ஸ்வாமியே! ஆதிநாதனும், வேதங்களும், சீதை சரித்திரமான இராமாயணமும், மஹாபாரத ஸாரமான கீதையும், குற்றமற்றதான த்ராவிடவேதமான ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளும், அவற்றிற்கு ஆசார்யர்கள் செய்த தெருள்மிக்க வ்யாக்யானங்களும் வாழ்ச்சியடைவதற்காக, பாதி ஆயுஸ்ஸைக் கடந்த மாமேதையான தேவரீர் உம் தேவிமாரொடும் கூட மீதிப் பாதி ஆயுளையும் காண்பீராக!)

**திருநாங்கூர் ப்ரதிவாதி பயங்கரம், வித்யாபூஷணம்**
**ஸ்ரீ.உ.வே.வித்வான் அண்ணங்கராசார்ய ஸ்வாமி**

जीर्णप्रायप्राक्तनार्यग्रन्थान् सर्वान् प्रकाशयन् । कृतोपकारो जगतो जयतात् गुरुराडयम् ।।

பெரும்பாலும் செல்லரித்துப்போகும் நிலையிலிருந்த பூர்வாசார்ய க்ரந்தங்களனைத்தையும் வெளிப்படுத்தி உலகிற்கு உபகாரம் செய்த இவ்வாசார்யவர்யர் வெற்றிபெற்று விளங்கட்டும்.

जीर्णोद्धारे महत् पुण्यं प्रतिष्ठात: प्रकीर्तितम् । आगमज्ञै: महत् पुण्यं तत् प्राप्तं गुरुणाऽमुना ।।

புதிதாக ஒரு கோயிலைக்கட்டி ப்ரதிஷ்டை செய்வதைக்காட்டிலும் உள்ள

கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்வது பெரும் புண்ணியம் என்று ஆகமம் அறிந்தவர்கள் கூறுகின்றார்கள். பூர்வாசார்ய க்ரந்தங்களை ஜீர்ணோத்தாரணம் செய்யும் இவரால் அந்தப் புண்ணியம் அடையப்பட்டுள்ளது.

## श्री.उ.वे.विद्वान् शिरोमणि श्रीमदासूरि नरसिंहाचार्यः श्रीभूतपुरी.

श्रीरङ्गनाथो वृषशैलनाथो हस्त्यद्रिनाथो यदुशैलनाथः।
सर्वे च देवाः महिषीसमेताः श्रीकृष्णमाचार्यगुरौ दयन्ताम्॥

கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் எம்பெருமான்கள் தத்தம் தேவியரோடு கூடியிருந்து ஸுதர்ஶநர் ஸ்ரீகிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி விஷயத்தில் அருள்புரிவார்களாக.

श्रीमत्पुत्तूरनगर्यां च श्रीमान् विद्वच्छिरोमणिः।
श्रीमान् श्रीकृष्णमाचार्यः समिन्धां शरदश्शतम्॥

திருநிறைந்த புத்தூர் என்னும் பேரூரிலே ஜ்ஞானபக்தி வைராக்யங்கள் முதலான செல்வங்கள் நிறைந்தவராய், அறிஞர் தலைவராயிருக்கும் ஸ்ரீக்ருஷ்ணமாசார்யஸ்வாமி நூறாண்டுகள் பொலிவுடன் வாழ்வாராக.

## शिरोमणिः विद्वान्,व्यकरणवेदान्तप्रवीणः श्री.उ.वे.तिरुमलाचार्यस्वामि, श्रीरङ्गम्

श्रीकृष्णस्वाम्याह्वय विप्र एषः श्रीवाससूरेः तनयो विनीतः।
कौण्डिन्यगोत्राम्बुधिपूर्णचन्द्रः चकास्ति पुत्तूरुवराग्रहारे॥

ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியின் குமாரராய், கௌண்டின்ய கோத்ரம் என்கிற கடலில் உதித்த பூர்ணசந்த்ரராய், அடக்கமுள்ளவராய், அந்தணரான இந்த ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் புத்தூர் என்னும் சிறந்த அக்ரஹாரத்தில் விளங்கா நிற்கிறார்.

यतोऽयमद्यापि पितृप्रवृत्तां श्रीवैष्णवानां खलु पत्रिकां ताम्।
सुदर्शनाख्यां शुभदां च शुद्धां प्रकाश्य लोकस्य हितं करोति॥

தந்தையால் தொடங்கப்பெற்றதாய், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நன்மை செய்வதாய், பரிஶுத்தமான ''ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶநம்' என்னும் பத்திரிகையை இவர் இன்றளவும் உலகத்திற்கு நன்மை செய்கிறாரன்றோ.

तथायमूचे दशभिः प्रशस्तैः अष्टाभिरण्यन्त्यसुसङ्घजातैः।
गाथैर्यदुक्तं द्रमिडोद्भवैस्तु तद्वैष्णवं नान्यदिति प्रधाष्ट्र्यम्॥

அவ்வண்ணமே கடைச்சங்க காலத்தில் தோன்றிய புலவர்களால் இயற்றப்பட்ட தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய தொகை நூல்களில் கூறப்பட்டுள்ள சமயம் வைஷ்ணவமே, வேறொன்றுமில்லை என்று தைரியத்துடன் இவர் நிரூபித்தார்.

तथैव कम्पन् कविना कृतेऽस्मिन् रामायणे द्राविडसूक्तिबद्धे।
श्रीवैष्णवं तत्परमं मतं हि विष्णु परश्चेत्ययमाह धार्ष्ट्यम् ।।

அவ்வண்ணமே கம்பன் என்னும் மஹாகவியினுலே இயற்றப்பெற்ற பெருந்தமிழ்க்காப்பியமான இராமாயணத்தில் ஸ்ரீவைஷ்ணவமே கவிஞனின் சிறந்த மதமென்றும், விஷ்ணுவே அவனுக்குப் பரம்பொருள் என்றும் தைரியத்துடன் இவர் கூறினுர்.

भूत्वा पुरा पूर्वशिखान्ववाये समिरभे यः खलु विष्णुचित्तः।
विष्णुः परो नान्य इति प्रतिज्ञां राज्ञस्सभायाम् अकरोत्पृथिव्याम्।।
स एव नूनं पुनरद्य कृष्णनाम्ना हि तत्रैव हि तादृशर्क्षे।
भूत्वा स्वकार्यं च तथैव कुर्वन् भाभाति नोचेत्कथमीदृशः स्यात्।।

முன்னெரு காலத்தில் பூர்வஶிகைக் குலத்தில் ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் இவ்வுலகில் அவதரித்த விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் 'விஷ்ணுவே பரம்பொருள்; வேறெந்த தெய்வமுமல்ல' என்று பாண்டியராஜஸபையிலே அறுதியிட்டுப் ப்ரதிஜ்ஞை செய்தார். அவரே இன்று அதே குலத்தில் அதே நக்ஷத்திரத்தில் 'கிருஷ்ணன்' என்னும் பெயரோடு தோன்றி, தாம் செய்த அந்த பரதத்வ நிர்ணய கார்யத்தை நாடு நகரமும் நன்கறியச் செய்துகொண்டு விளங்குகிருர் போலும். இல்லையேல் எப்படி இத்தகையவராய் இருக்க முடியும்?

ये मे मतं चैतदिति स्वयं हि कृष्णोप्युपक्रम्य जगाद यत्तत्।
परं च विष्णोर्मतमेतदेवेत्यूरीकरोत्युद्धृतहस्त एषः।।

க்ருஷ்ணத்வைபாயனரான வேதவ்யாஸர் கைதூக்கி நின்று மும்முறை ஸத்யம் செய்து கேசவனே பரம்பொருள் என்று உறுதிப்படுத்தினுர். கண்ணனும் ''யே மே மதமிதம்'' என்று தொடங்கும் கீதாஶ்லோகத்தில் அதைத் தெளிவு படுத்தினுன். இந்த க்ருஷ்ணரும் அவ்வண்ணமே செய்கிருர்.

तस्मादिदानीमपि तद्धि नाम लोकैर्महद्भिः व्यपदिश्यतेऽस्मिन् ।
नो चेत्कृतस्स्यदिह वाक्सुयुद्धं सुदर्शनस्यापि तथा प्रयोगः

அதனுலேயே அவ்விரு க்ருஷ்ணர்களுக்குரிய அந்த க்ருஷ்ண நாமம் இவரிடம் பொருத்தமாயிருக்கிறது என்று இப்போதும் பெரியோர்கள் கூறுகிருர்கள். இல்லாவிடில் பரதத்த்வநிர்ணயத்துக்காக வாதப்போர் புரிவதும்,ஸுதர்ஶந ப்ரயோகம் செய்வதும் எப்படிப் பொருந்தும்?

**ஸ்ரீ.உ..வே.அந்தணல்லூர் எஸ்.முரளி ஸ்வாமி**

'பறப்பதன் குட்டி தவழுமோ?' என்ற ரீதியில் தந்தையார் தொடங்கிய ஸ்ரீவிஷ்ணுசித்தவிஜயத்தை மிகவும் வெற்றியுடன் எழுதி ஶ்ருதிஸ்ம்ருதி பாகங்களை வெளியிட்டார் நம் ஸ்வாமி.

ஸம்பிரதாயவாத க்ரந்தங்களில் ஈடுபட்டதால் நம் ஸ்வாமிக்கு வடகலை

ஸம்பிரதாயத்திலும் தத்ஸம்பிரதாயஸ்தர்களிடமும் விரோதமுண்டு என்று பலர் தவருக நினைக்கக்கூடும். ஆனுல் தேசிகஸம்ப்ரதாயத்தில் மிகுந்த ஊற்றத்தையு முடைய கோழியாலம் ஸ்வாமியிடம் ஸ்வாமி வைத்துள்ள ஆசார்யப்ரதிபத்தியை அறிந்தவர்கள் அவ்வாறு கொள்ளமாட்டார்கள். தென்கலை, வடகலை முதலான பேதங்களெல்லாம் பகவத் க்ருபைக்கு ப்ரயோஜகங்களன்று. வைஷ்ணவத்வமொன்றே பகவத் க்ருபைக்கு ப்ரயோஜகம் என்று த்ருடமாக அறிந்து அநுஷ்டித்துக்காட்டி வருபவர் நம் ஸ்வாமி. தென்கலையாராயினும், வடகலையாராயினும் தவறு செய்தார்களாகில் எடுத்துக்காட்டத் தவறவும் தயங்கவும் மாட்டார் நம் ஸ்வாமி. அப்படியே எவரிடமாயினும் வைஷ்ணவத்வ மிருக்குமாகில் கௌரவமளிக்கவும் தவறமாட்டார், எல்லாக் குணங்களிலும் மிகச்சிறந்ததான வைஷ்வணத்வம் நம் ஸ்வாமியிடம் குடிகொண்டிருக்கிறது.

செல்வம், கல்வி முதலான பல சிறப்புகள் இருந்தபோதிலும் கர்வமென்பது சிறிதுமில்லாதவர் நம் ஸ்வாமி. எத்தனையேனும் தாழ்ந்தார் தம்மிடம் வந்தாலும் ஆஸநாதிகளைக் கொடுத்து உபசரிப்பார். ‘‘மஹதோ மந்தை$_3$ஸ் ஸஹ நீரந்த்$_4$ரேண ஸம்ஶ்லேஷஸ்வப$_4$ாவத்வம் ஸௌஶீல்யம்’’ என்றபடி ஸௌஶீல்யத்தின் ஸீமாபூமியாகத்திகழ்பவர்.

‘‘ஸுதர்ஶநத்துக்கு கிட்டும் பெருமையெல்லாம் நம் பூர்வாசாரியர்களைச் சேரும், அடியேனை ஒரு வ்யாஜமாகக் கொண்டு எம்பெருமான் தான் செய்கிருன். அடியேன் ஒன்றும் செய்யவில்லை. இது உண்மை’’ என்று அடிக்கடி ஸாதிப்பர் நம் ஸ்வாமி. ‘பல மஹான்களால் முடியாத அரிய பெரிய காரியங்களைப் பரம லௌகிகனை என்னைக்கொண்டு ஸாதித்துக் கொள்கிருன்’ என்று மிகவும் விநயத்துடன் சொல்லுவார். அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்த பரமகாருணிகர். கீதாசார்யன் அருளிய ‘மஹாத்மா’ இவரே என்பதில் சிறிதளவும் ஸந்தேஹமில்லை.

சைவர்கள் சைவர்களாகத் திகழவேணும். வைஷ்ணவர்கள் வைஷ்ணவர்களாகத் திகழவேணும். வேற்றுமையில் ஒற்றுமை காணவேணும் என்று சகிப்புத் தன்மையை விடாது வலியுறுத்தி வருபவர் நம் ஸ்வாமி ஒருவரே. ஸ்வாமி இன்னுமொரு நூற்றுண்டு எழுந்தருளி தர்ஶநஸ்தாபநம் செய்யவேணும்.

எம்பெருமானுரையும், நம்பிள்ளையையும், பெரியவாச்சான்பிள்ளையையும், பிள்ளைலோகாசார்யரையும், மணவாளமாமுனிகளையும் நாம் ஸேவிக்கும் பாக்யத்தையடைந்தோம் அல்லோம். இவர்கள் அனைவரும் திரண்ட ஓர் உருவம் என்னலாம்படி எழுந்தருளியிருக்கிருர் நம் ஸ்வாமி. இவர் காலத்தில் நாம் வாழும் வாய்ப்பு ஜந்மாந்தர நற்றவப் பயனேயாகும். ‘‘ஞானப்பிரானை யல்லாலில்லை, நான் கண்டநல்லதுவே’’ என்று ஆழ்வார் வராஹப்பெருமாளாகிற ஞானப்பிரானைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்தது இவர் திறத்திநும்

அநுஸந்திக்கத்தகும் என்று அடியேனுக்கு நினைக்கவும், கூறவும், எழுதவும் தோன்றுகிறது.

**கல்விக்கடல் ஸ்ரீ.தி.வே.கோபாலய்யர்**

ஸுதர்ஶநர் இயற்றியுள்ள திருமால் தொடர்பான பரிபாடல்களின் உரையும், கம்பனின் சமயம் என்னும் நூலும் அவருக்குத் தமிழிலும் போதிய புலமை உள்ள செய்தியைத் தெரிவிப்பதனுல் தமிழ் ஒன்றே வல்ல சான்றேருக்கும் பிரமாண நூல்களாகக் கொள்ளும் தகுதியுடையனவாகவும் உள்ளன. அருளிச்செயல்களின் பழைய உரைகளுக்கு இவர் விவரணம் எழுதுமிடத்தில் பொருத்தமான சங்கப்பாடல் அடிகளை மேற்கோளாகக் காட்டுவதனையும் கண்டு மகிழலாம். இவர் இயற்றிய 'சங்கரரும் வைணவமும்' போன்ற நூல்கள் ஓரளவு வடமொழி அறிவு உடைய நடுநிலையாளர்களுக்குப் பெருவிருந்தாகும். கீதை முழுமைக்கும் எம்பெருமானர் பாஷ்யத்தை அடியொற்றி மிகவிரிவாக 3000 பக்கஅளவில் ஸுதர்சனர் வரைந்துள்ள விளக்கம் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அருநிதியாகும்.

ஸுதர்ஶநருக்குத் தொண்டு செய்ய அவர் தேவியாரும் பல்லாண்டு நோய்நடி நோன் தொடையுடன் வாழ அரங்க நாச்சியாருடனுறை அரங்கப்பெருமான் அருளைப் பரவுகிறேன்.

**திருமலை அநந்தாண்பிள்ளை, வானமாமலை வித்வான்**
**ஸ்ரீ.உ.வே.என்.எஸ்.கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி**

ஸ்ரீமத்$_3$யதீ$_3$ந்த்$_3$ரவரயோகி$_3$ பத$_3$ாப்$_3$ஜ ப்$_4$ருங்க$_3$ம்
ஸ்ரீவிஷ்ணுசித்தகு$_3$ருவர்ய த$_3$யைக பாத்ரம்|
த்ரய்யந்த யுக்$_3$மவிஶதீ$_3$கரணப்ரவீணம்
ஸ்ரீக்ருஷ்ணஸூரிமநக$_4$ம் ப்ரணமாமி நித்யம்||

ஸ்வாமி எம்பெருமானர், ஸ்வாமி மணவாளமாமுனிகள் ஆகியோரின் திருவடித் தாமரைகளில் வண்டுபோல் விளங்குபவரும், எங்களாழ்வானுகிற சிறந்த ஆசார்யருடைய க்ருபைக்கு ஒரே கொள்கலமானவரும், ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதாந்தார்த்தங்களை விளக்குவதில் வல்லவரும், குற்றமற்றவருமாகிய க்ருஷ்ணஸ்வாமி ஐயங்காரை நாடோறும் வணங்குகிறேன்.

**கோயிலாத்தான் ஸ்ரீ.உ.வே. விஜயராகவாசார்யஸ்வாமி**

''ஸ்வாத்யாம் ஸாக$_3$ரஶுக்தி மத்$_4$யபதிதம் ஸந்மௌக்திகம் ஜாயதே'' (ஸ்வாதீ நக்ஷத்திரத்தன்று கடலில் ஒரு சிப்பியில் விழும் தண்ணீர்த்துளி ஒரு செழுமுத்தாக ஆகிறது) என்ற சிறப்புடைய சோதி நன்னுளில் திருவவதரித்த நம் புத்தூர்ப் பெருந்தகையை அறியாதார் இலர்; க்ரந்த ஸம்ரக்ஷணமே தமது லக்ஷ்யமாகக் கொண்ட ஸ்வாமி காலவ்யவத$_4$ாநமில்லாமல் தமது வாழ்நாள் முழுவதும் அதற்கே அர்ப்பணித்துப் பல பூர்வாசார்ய க்$_3$ரந்த$_2$ங்களை அழியாமல்

பதிப்பித்ததோடன்றி, அவற்றை யாவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய விவரணங்களையும் அருளிவருவது குறிப்பிடத்தக்கது. அச்சுப்பிழைகளைக் களைந்து, நாம் எளிதாகப் படித்து மனத்தில் பதித்துக்கொள்ளும் வகையில் பல குறியீட்டு முறைகளைக் கையாண்டு ப்ரசுரம் செய்வதற்கு இவர் மேற்கொள்ளும் ஶ்ரமத்தை அத்துறை வல்லுநர்களே அறிவர். பல பெரியோர்களிடம் தாம் அடிபணிந்து கேட்ட அர்த்த$_2$விஶேஷங்களை நாமும் அநுபவிக்குமாறு புத்தக வடிவில் அநுக்ரஹித்தமைக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்? எளிமையான இவருடைய எழுத்துக்குக் காரணம் ஸ்வப$_4$ாவத்திலேயே இவர் எளியவர். யாவரும் சென்று கிட்டிப் பேசலாம். ப்ரமாணங்களுக்கு பரதந்த்ர மானவர். மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களாலும் தூயவர். ஆர்ஜவத்துக்கு இருப்பிடமானவர்.

**பேராசிரியர் சொல்லழகர் Dr.K.A.மணவாளய்யங்கார்ஸ்வாமி–**
**ஸுதர்ஶநர் ஸ்வாமிக்கு எழுதிய கடிதம்**

ஸ்ரீமான் உ.வே.மஹாவித்வான் புத்தூர் அட்வகேட் எஸ்.கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி திருவடிகளில் அடியேன் K.A.மணவாளன் தண்டன் ஸமர்ப்பித்துச் செய்யும் விண்ணப்பம். அடியேன் குறிப்பாக பகவத்கீதை, திருப்பாவை மற்றும் திவ்ய ப்ரபந்த வ்யாக்யான விளக்கங்கள், ஸ்தோத்ர நூல் உரைகளை தேவரீர் புத்தகங்களை இருமுறை படித்துக் குறிப்பு எடுத்துதான் 40வருடங்களாக உபந்யஸித்து வருகிறேன். தேவரீருடைய நூல்கள், நம் ஸம்ப்ரதாயம் கொடிகட்டிப்பறக்க உதவுகின்றன. இது உண்மை. பல்லாண்டு பல்லாண்டு நம் எம்பெருமானுர் தர்ஶநம் தழைக்க தேவரீர் நித்யஸ்ரீர் நித்யமங்களமாக எழுந்தருளியிருக்கவேணும்.

**ஸ்ரீ.உ.வே.சொக்கநாவூர் E.S.V.நரஸிம்ஹாசார்யஸ்வாமி**

पूर्वयुगान्तेऽर्जुनाय स्वामी कृष्णो गीतामुपादिशत्।
अद्यतु सार्वजनीनं गीताभाष्यं द्रामिडीमकरोत् ।।

த்வாபர யுகாந்தத்தில் ஸ்வாமி க்ருஷ்ணன் அர்ஸுனனுக்கு கீதையை உபதேஶித்தார். இக்கலியுகத்தில் யாவர்க்கும் எளிய தமிழில் கீதா பாஷ்யத்தின் விளக்கவுரையை அருளிச்செய்தார் அவரே.

परकालावतारमासे नृसिंहस्य स्वातितारके ।समुद्भूताय बुधायास्मै भवतात् सर्वमंगलम्।।

கலியன் அவதரித்த கார்த்திகை மாதத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹன் அவதரித்த ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் தோன்றிய பேரறிஞர் ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமிக்கு எம்போதும் மங்களம் உண்டாகட்டும்.

मङ्गलं सकुटुम्बाय कृष्णस्वाम्याख्यधीमते। संप्रदायमहामालारत्नाभाय शतं समा: ।।

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமெனும் வாடாமாலையில் ஒளிரும் ரத்நமாய்

மஹாஜ்ஞானவானுக விளங்கும் ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமிக்குப் பல்லாண்டுகள் மங்களம் ஓங்குக.

**திருநாராயணபுரம் அரையர் ஸ்ரீ.உ.வே.ஸ்ரீராமசர்மாஸ்வாமி**

सञ्चरन्नतिवेगेन सुदर्शनमिवापर: । भास्करश्चक्रमत्यन्तं निष्कम्य इव दृश्यते ।।

மிகவேகமாகச்செல்லும் மற்ருெரு ஸுதர்ஶந சக்ரம் போன்றவராய், மிகவும் அசையாமலிருக்கும் ஸூர்யன்போல் விளங்குகிருர் ஸுதர்சனர்ஸ்வாமி.

कृष्णार्य द्रविडव्याख्याचक्रवर्तिनमेव य: । नाम्ना च विभवेनापि सदृशस्समटीक्त ।।

பெயராலும், பெருமையாலும் தமிழ் ப்ரபந்தங்களின் வ்யாக்யான சக்ரவர்த்தியான க்ருஷ்ணரெனும் பெரியவாச்சான்பிள்ளையை ஒத்திருக்கிருர்.

**கே.வரததேஶிகாசாரி B.Sc.,B.L., வழக்குரைஞர், விழுப்புரம்**

ஸுதர்ஶநரின் நூல்களில் ''சங்கரரும் வைணவமும்'' என்கிற நூலும், அவரது கேள்வி பதில்களின் சதகங்களும் மட்டும் லுப்தமாகாமல் இருந்தால், அவைகளைக் கொண்டே தமிழ் நாட்டில் ஸ்ரீவைஷ்ணவத்தை நலிந்து போகவிடாமல் வாழவைக்கலாம்.

**ஸ்ரீ.உ.வே.அலங்காரம் தேவராஜ ஐயங்கார்ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்**

கற்றவர்கள் கொண்டாட காசினியோர் கை குவிப்ப
நற்றமிழால் நான்பாட நன்மைசேர் – சுற்றமொடு
ஏறுபுகழ்கிருஷ்ண சாமியே நீர் இவ்வுலகில்
நூருண்டு வாழ்வீர் மகிழ்ந்து.

## 'ஸுதர்ஶனர்' ஸ்வாமியின் கைவல்யஸித்தாஞ்ஜனத்தின் பெருமை.

**ஸ்ரீ.உ.வே.ந்யாயவேதாந்த வித்வான் திருப்பதி தி.அ.கிருஷ்ணமாசார்யஸ்வாமி**

ஸ்ரீ.உ.வே.ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி ஸுதர்சனர் என்றழைக்கப்படுவதன் காரணத்தை அடியேனுக்குத் தோன்றியதோர் வ்யுத்பத்தியின் வாயிலாக விளக்குகிறேன். शोभनं दर्शनं येन स: सुदर्शन: (ஶோப$_4$நம் த$_3$ர்ஶநம் யேந ஸ: ஸுத$_3$ர்ஶந:) என்பதே அந்த வ்யுத்பத்தி. ''யாரால் தர்ஶநமானது –நம்முடைய ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தமானது, ஶோபநமாகிறதோ– எல்லாருடைய மனத்திலும் இன்பமூட்டுவதாய், மனத்தை ஈடுபடுத்துவதாய் விளங்குகிறதோ – அவர் ஸுதர்ஶநர்'' என்பது இதன் பொருள். நம் தர்ஶநம் இங்ஙனம் ஶோபநமாவது எப்போது என்ருல், ஒரு வித்வான் தன்னுடைய பாண்டித்யப் பெருமையாலும், ஆராய்ச்சிவன்மையாலும் நமது தர்ஶநத்தில் குறை கூறுகின்ற பிறமதத்தவரை மறுத்து, நம் தர்ஶநத்தில் உள்ள ஸாரார்த்தங்களைப் பண்டிதர், பாமரர் என்னும் வாசியில்லாமல் அனைவர்க்கும் எடுத்துரைத்த போதுதான், என்பது தனிப்படச் சொல்லவேண்டியதில்லை. அத்தகைய

பாண்டித்யமும், ஆராய்ச்சி வன்மையும் பெற்று, பரபக்ஷநிரஸநமும் ஸ்வபக்ஷஸ்தாபநமும் செய்துவரும் நம் புத்தூர் வக்கீல் ஸ்வாமி 'ஸுதர்ஶநர்' என்று அழைக்கப்படுகிருரென்ருல் ஸ்ரீவைஷ்ணவவுலகம் முற்றும் மகிழ்ச்சியடையுமென்பதில் எள்ளவும் ஐயமில்லே.

முற்காட்டியபடி இந்த ஸ்வாமி இரண்டு காரியமும் இடைவிடாமல் செய்து நம் தர்ஶநத்தை வாழவைக்குமடைவில் பலபல நூல்களே இயற்றியிருந்தாலும், 'கைவல்யஸித்தாஞ்ஜநம்' என்ற நூல் ஈடுமெடுப்புமில்லாததென்பது அடியேனது துணிபு.

அந்நூலேப்பற்றிச் சிறிது விண்ணப்பித்து ஸத்தை பெறுகிறேன்:–

நல்ல மூலிகைகளேக் கொண்டு சித்தர்கள் சித்தப்படுத்தியதனுல் ஸித்தாஞ்ஜனமெனப்படுகின்ற மையைக் கண்ணில் இட்டுக்கொண்டு பூமியில் பார்த்துச்சென்ருல் பூமியில் மறைந்து கிடக்கும் நிதி நம் கண்ணுக்குத் தெரியும். அது போன்று இவருடைய இந்த நூலே நன்ருகப்படித்து மனக்கண்ணிலிட்டுப் படியவைத்துக்கொண்டு பார்த்தால் 'கைவல்யம்' என்பதன் உண்மை தெரியுமாகையால் இந்நூலுக்குக் கைவல்யஸித்தாஞ்ஜனம் என்று பெயரிட்டனர் இதன் ஆசிரியப்பெருந்தகை.

கைவல்யமாவது–ஸம்ஸாரபந்தம் நீங்கி ஜீவாத்மா தனித்திருக்கும் நிலே. मुक्तिः कैवल्यनिर्वाण श्रेयोनि : श्रेयसामृतम् मोक्षोऽपवर्गः என்று அமரகோஶத்தின் வ்யாக்யானத்தில் கைவல்ய ஶப்தத்தை விவரியாநின்ற ஸ்ரீபாநோஜிதீக்ஷிதர் बन्ध विरहात् केवलस्य भवः कैवल्यम् என்று விளக்கந்தருவது காணத்தக்கது. ஜீவாத்மா இவ்வுலகில் ஶரீரத்தோடு கூடியிருந்து அசித்தான பொருள்களே அனுபவித்தனுபவித்துச்சலித்துப்போய் எம்பெருமானே உபாஸித்து அதன்பயனுக ஶரீரஸம்பந்தம் நீங்கிப் பரிஶுத்தனை தன்னேத்தானே அனுபவிக்கும் நிலேக்குக் கைவல்யம் என்று பெயர். இத்தகைய கைவல்ய நிலேயை அடையவிரும்பும் அதிகாரியை எம்பெருமான் ஸ்ரீகீதையில் ஜிஜ்ஞாஸு: என்ற சொல்லால் குறித்தருளினுன். ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹத்திலும், எம்பெருமானுர் கீதா பாஷ்யத்திலும் இவனே 'ஆத்மார்த்தீ' 'கைவல்யார்த்தீ' எனக்குறிக்கின்றனர். இவனேப் பற்றி ஸ்ரீவைஷ்ணவர்களுக் குள்ளேயே இரண்டுவகையான கருத்து உலகில் நிலவிவருகின்றது, அல்லது நிலவிவந்தது.

(1) இவ்வதிகாரி ஶரீரம் நீங்கியவுடன் ஶுத்தமான தனது ஆத்மாவை இந்த ப்ரக்ருதிமண்டலத்திலேயே இருந்துகொண்டு அனுபவிக்கிருன். இவ்வனுபவம் முக்தியல்ல. இவன் தன்னேச் சிலநாள் இங்கே அனுபவித்து விட்டு, மதுவித்யாநிஷ்டன் போன்று, பிறகு பரமபதம் சென்று பரமாத்மாநுபவம் செய்யும் முக்தனுகிவிடுகிருன். இவன் செய்யும் கைவல்யானுபவம் நித்யமுக்தியல்ல என்று சிலர் கருதினர்.

(2) மற்றும் சிலரோவெனில் முப்பத்திரண்டு வித்தைகளில் (உபாஸநங்களில்) ஒன்ருன பஞ்சாக்நி வித்யாநிஷ்டனே இவ்வதிகாரி. இவன் அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபதம் சென்று எம்பெருமானுக்கு ப்ரகாரமாக (ஶரீரமாக) தன்னையனுபவிப்பவன். மற்றுமுள்ள வித்யாநிஷ்டர்கள், தனக்கு ப்ரகாரியாக (ஆத்மாவாக) எம்பெருமானை அனுபவிப்பவர்கள். இவர்களுடைய அனுபவத்தில் எம்பெருமான் முக்கியமாகையால் இவர்களை பரப்ரஹ்மாநுபவ ஶாலிகள் என்றும், பஞ்சாக்நி வித்யாநிஷ்டன் அனுபவிக்கும் அனுபவத்தில் ஆத்மாவாகிற தானே முக்யமாகையால் இவனை ஆத்மாநுபவஶாலியென்றும் கூறத்தடையில்லை. இவன் நித்யமுக்தனே என்றனர்.

இவ்விரண்டு கொள்கைகளும் உபயவேதாந்த க்ரந்தங்கள் எல்லாவற்ருேடும் முரண்படுகையால் பொருந்தமாட்டா என்று கூறி உண்மையான கொள்கையை இந்த ஸ்வாமி இந்நூலில் நிலைநாட்டியுள்ளார்.

அது வருமாறு:– சாந்தோக்யோபநிஷத்தில் சொல்லப்பட்ட ப்ராணவித்யா நிஷ்டனே (அதாவது ப்ராணஶப்தத்தால் குறிக்கப்பட்ட ஜீவாத்மாவை உபாஸிப்பவனே) கைவல்யநிஷ்டன். இவனுக்குத் தன்னனுபவமேயொழியப் பரமாத்மாநுபவம் அடியோடு கிடையாது. இவன் தன்னுத்மாவை அனுபவிப்பது இப்ரக்ருதி மண்டலத்தில் அன்று, விரஜாநதிக்கு அப்பால் நித்யவிபூதியிலேயே. அவ்விடத்திற்கு இவன் செல்லும் வழி அர்ச்சிராதி மார்க்கமன்று. ஐஶ்வர்யார்த்திகள் மேலுலகத்திற்குச் செல்லும் தூமாதிமார்க்கமு மன்று. இவ்விரண்டிலும் வேறுபட்டதொரு வழி. ஐஶ்வர்யார்த்திகளும் பரப்ரஹ்மாநுபவார்த்திகளும் செல்லும் தூமாதிமார்க்கமும் அர்ச்சிராதிமார்க்கமும் அவர்களுக்கு, தம்மால் அனுபவிக்கப்படும் ஐஶ்வர்யமும், பரப்ரஹ்மமும் போன்று உத்தேஶ்யமாக (ரஸிக்கப்படும் மார்க்கமாக) அமைந்தபடியால் அவற்றை ஶாஸ்த்ரம் சொல்லிற்று. இக்கேவலனுக்கோ வென்னில் – தன்னுடைய ஆத்மாவொன்றுமே உத்தேஶ்யமாகி, வழி உத்தேஶ்யமல்லாமை யாலே இதை ஶாஸ்த்ரம் விளக்கிக்கூறவில்லை. இங்ஙனம் பரமபதம் சென்று தன்னையனுபவித்துக்கொண்டிருப்பவன் அதைவிட்டு உயர்ந்த மோக்ஷமான பரப்ரஹ்மாநுபவமும் செய்வதில்லை. ஐஶ்வர்யானுபவம் செய்ய ப்ரக்ருதி மண்டலத்திற்கும் திரும்புவதில்லை. இவன் அனுபவிப்பது தாழ்ந்த மோக்ஷமே. இத்தகைய தாழ்ந்த மோக்ஷத்தை இவன் ஏன் எம்பெருமானிடம் ப்ரார்த்தித்து அவனை உபாஸிக்கவேண்டும். எம்பெருமான் தான் இந்தத் தாழ்ந்த பயனை இவனுக்கு ஏன் தந்தருளவேண்டும்? என்ருல், அதற்குக் காரணம் இவனுடைய ப்ரதிபத்திவைஶேஷ்யமேயாகும். தாம் செய்த புண்ணியம் அளவுபட்டதாகை யால் ஐஶ்வர்யார்த்திகளுக்கு ஐஶ்வர்யத்தில் ஆசையும் ப்ரதிபத்தியும் (த்ருடாத்யவஸாயமும்) உண்டாகிறது. அதைவிட உயர்ந்தபுண்ணியம் செய்த

ஜிஜ்ஞாஸுவுக்குத் தன்னுடைய ஆத்மானுபவத்தில் ஆசையும் ப்ரதிபத்தியும் உண்டாகிறது. மிகமிக உயர்ந்த புண்ணியசாலியான ஜ்ஞாநிக்குப் பரப்ரஹ்மாநுபவத்தில் ஆசையும் ப்ரதிபத்தியும் உண்டாகிறது. இங்ஙனம் புண்ணியத்தின் ஏற்றத்தாழ்வுகளினுல் உண்டான ப்ரதிபத்தியின் ஏற்றத்தாழ்வு களாகிற வேறுபாட்டைத் திருவுள்ளம் பற்றியே ஜீவாத்மாவுக்கு முதல் முயற்சியில் தான் அளித்திருக்கும் ஸ்வாதந்த்ர்யத்தையே பற்றுசாகக்கொண்டு அவரவர்கள் வேண்டிய பயனையே எம்பெருமான் தந்தருளுகிருன். (''நெடியான் தன் நாமமே ஏத்துமின்கள், ஏத்தினுல் தாம் வேண்டும் காமமே காட்டும் கடிது'' (இரண்.திருவ.) என்ருரிறே பூதத்தாழ்வார். அவரவர்கள் வேண்டிய பொருளைத்தவிர வேருென்றையும் தரமாட்டாமை எம்பெருமானுடைய பெருந்தன்மையாகும். இஷ்டமில்லாததை அடியார்களுக்குக் கொடுத்துத் திணிக்கமாட்டாதவனன்ருே எம்பெருமான்) ஆகையால் இக்கைவல்யாநுபவம் தாழ்ந்ததொரு மோக்ஷமேயாகும்.

பஞ்சாக்நி வித்யாநிஷ்டன் எம்பெருமானுக்கு ப்ரகாரமாகத் தன்னை உபாஸித்தாலும், மற்றுமுள்ள ப்ரஹ்மவித்யாநிஷ்டர்கள் போன்று பரிபூர்ண ப்ரஹ்மோபாஸகனே. அவர்களைப் போலவே அர்ச்சிராதிமார்க்கத்தால் பரமபதம் செல்பவனே. ப்ரஹ்மாநுபவம் சிறிதுமில்லாமல் அர்ச்சிராதிமார்க்கத்தாலன்றியே ஏதோ ஒருவழியால் விரஜையைக் கடந்து ஸூக்ஷ்மஶரீரமும்கழியப்பெற்று நித்யவிபூதியில் அஶரீரியாய்த் தன்னைமட்டுமே அனுபவிக்கும் இக்கேவலனை, அர்ச்சிராதிகதியாலே பரமபதம் சென்று பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் செய்யும் பஞ்சாக்நிவித்யா நிஷ்டனைக் கூறுவது ப்ரமாணங்களோடு முரண்படும்– என்று இப்படி ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ ஸாத்விகபுராண ஸ்ரீபாஷ்யதீபஸாராதி ஸம்ஸ்க்ருத வேதாந்த க்ரந்தங்களைக்கொண்டும் திவ்யப்ரபந்த தத்வ்யாக்யான ரூபமான த்ராவிட வேதாந்த க்ரந்தங்களைக்கொண்டும் இந்த ஸுதர்ஶநர் ஸ்வாமி கைவல்யஸித்தாஞ்ஜனமெனும் நூலில் அசைக்க முடியாமல் 96 பக்கங்களில் விரிவுக்கஞ்சாமல் நிரூபித்துத் தெளிவுபடுத்தியிருப்பது ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஓர் ஒப்பற்ற விருந்தாகும்.

இங்ஙனம் லோகோபகாரமே போதுபோக்காக எழுந்தருளியிருக்கும் இவர், கீழ் அடியேன் காட்டியபடி 'ஸுதர்ஶநர்' என்னும் தமது திருநாமத்தை அநுக்ஷணமும் அந்வர்த்தமாக்கிக்கொண்டே நமக்காக பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு இந்த லீலாவிபூதியிலேயே எழுந்தருளியிருக்கவேண்டு மென்று திருவேங்கடமுடையான் பூவார்கழல்களிலும் பேரருளாளன் துயரறு சுடரடிகளிலும் ஸவிநயம் ப்ரார்த்தித்து விடைபெறுகிறேன்.

**மதுரைப்பேராசிரியர் Dr.ஸ்ரீ.உ.வே.இரா.அரங்கராஜன்ஸ்வாமி**

கம்பருடைய பாடல்களை இலக்கியச்சுவை கருதிப் பயின்ற சைவர்கள்

கம்பர் திருமால் பரத்துவம் கூறும் பாடல்களை உருமாற்றினர். நூற்றுக்கணக்கான பாடல்களைப் புதியதாகச் செய்து இடையிடையே புகுத்தி கம்பனைச் சைவனுகக் காட்ட முனைந்தனர். இந்நிலையில் தான் ஸுதர்சனர் 'கம்பனின் சமயம்' என்ற (இருபாகங்கொண்ட) அரிய பெரியநூலைத் தமிழ் உலகிற்கு எழுதிவழங்கினுர். கம்பனின்சமயம் ஆழ்வார்களால் போற்றப்பட்ட வைணவமே என்றும், கம்பனின் கொள்கைப்படி திருமாலே முழுமுதற்கடவுள் என்றும் விரிவுக்கஞ் சாது பரக்க எழுதி நிரூபித்தார். அந்நூற்கண் நூற்றுக்கணக்கான கம்பர் பாசுரங் களை மேற்கோளாகக்காட்டினுர். சைவர்கள் சமரசவாதிகள் மற்றும் வறட்டு இலக்கியவாதிகள் பிடியிலிருந்து கம்பர் பாடல்களை விடுவித்துக் காத்தருளிய குணவாளர் நம் ஸுதர்ஶநர்.

**கோயில் வித்வான் ஸ்ரீ.உ.வே.நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.**

ஹரித்வாத் சக்ரத$_4$ாரித்வாத் ஸ்ரீநிவாஸ ப்ரப$_4$ாவத: ।
ஸுத$_3$ர்ஶநத்வாத் ஸெளலப்$_4$யாத் க்ருஷ்ணேய மிதிப$_4$ாதி மே ॥
ராமாநுஜத்வாத் க்ருஷ்ணத்வாத் க்ருஷ்ணுர்யோ ஹி மஹாமநா: ।
ஜீயாத் ஶதம் ஸுத$_3$ர்ஶந பத்ராதி$_4$போ பு$_3$தே$_4$ாத்தம: ॥

ஹரியாகையாலும், சக்ரதாரியாகையாலும், ஸ்ரீநிவாஸ ப்ரபாவத்தாலும், ஸுதர்ஶநராகையாலும், எளிமையினுலும், ராமாநுஜராகையாலும், க்ருஷ்ணரா கையாலும், அடியேனுக்கு இவர் கண்ணனே எனத்தோன்றுகிறது. ஸுதர்ஶந பத்ராதிபரும், வித்வதக்ரகண்யரும் பெருமனம் படைத்தவருமான ஸ்ரீ.உ.வே. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டு வாழிய வாழியவே.

**ஸ்ரீ.உ.வே.சிறுபுலியூர் கோ.க.சு.திருவாழி அண்ணன்ஸ்வாமியின் ஸ்ரீமுகம்**
**ஸுதர்ஶனரின் ஸப்ததிமலர்**

நாங்கள் ஆசார்ய வம்ஶத்தில் பிறந்தவர்கள். அதிலும் ஸ்ரீமந் மணவாள மாமுனிகளின் விஶேஷகடாக்ஷம் பெற்று 'கந்தாடையார்கள்' என்று கௌரவிக் கப்பட்ட திருவம்ஶத்தில் பிறந்துள்ளோம். ஆயிரக்கணக்கில் ஶிஷ்யர்கள் உள்ளார்கள். ஆனுல் எம்பெருமானுர், மணவாளமாமுனிகள் நியமித்தபடி, ஸதாசார்ய க்ருத்யத்தைச் செய்யாமல், பெயரளவில் ஆசார்யர்களாகவுள்ளோம். ஏதோ வந்த ஶிஷ்யர்களுக்குப் பஞ்சஸம்ஸ்காராதியைச் செய்து வருகிறேமே யொழிய, ஆங்காங்கு சென்று பரமதநிரஸந பூர்வகமாக எம்பெருமானுர் தர்ஶநத்தை ஸ்தாபிக்கவில்லை. இத்தனை ஶிஷ்யர்களில் ஒருவரையாவது சீர்திருத்தி ஜ்ஞாநபக்தி வைராக்யாதிகளை உண்டாக்கி, திருமகள்கேள்வனுக்கு அந்தரங்கர் ஆக்கினதாய்த் தெரியவில்லை. ஆனுல் தேவரீரோவெனில், ஆசார்ய வம்ஶத்தில் அவதரிக்காவிடினும் ஆசார்ய க்ருத்யத்தைப் பூர்ணமாகச் செய்து வருகின்றது. ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஶநம் மூலம் எல்லாரையும்சீர்திருத்தி,

திருமகள்கேள்வனுக்கு ஆளாக்குகிறது. உண்மையில் ஆசார்யர் தேவரீரே; தேவரீரை அவதார புருஷராகவே எண்ணுகிறேன்.

**ஸ்ரீ.உ.வே.K.E.B.ரங்கராஜன்ஸ்வாமி**

ஸ்ரீ.உ.வே.சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்யஸ்வாமி அடியேனுக்கு எழுதியிருந்த ஒரு கடிதத்தில் ''புத்தூர்ஸ்வாமி ஆர்ஜவம் (நேர்மை) மிக்கவர். சொல் ஒன்றும் செயல் ஒன்றுமில்லாதவர். ஆகவே நாம் பூர்ணமாக நம்பலாம். தம்மை ஸம்ப்ரதாயத்திற்கே ஒப்படைத்தவர். இதே (புஸ்தகங்கள் அச்சிடுவதே) காரியமாக இருப்பவர் என்றெழுதியுள்ளார்.

**ஸுதர்ஶனர் 84**

**அம்மாள் ஸ்ரீ.உ.வே.திருவேங்கடாசார்யஸ்வாமி,**
**கீழத்திருமாளிகை திருவெள்ளறை**

நல்லானியில் சோதிநாளில் வந்துதித்தார் விஷ்ணுசித்தராகிய பெரியாழ்வார். வீறுடைய கார்த்திகையில் சோதிநாளில் விஷ்ணுசித்தராகிய எங்களாழ்வான் குலத்தில் பிறந்தவர் நம் ஸுதர்ஶனர்ஸ்வாமி. அறுபதுஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து ஒருபத்திரிகையின் ஆசிரியராய் இருப்பவர் இவர் ஒருவரே. ஸர்வதாரி கார்த்திகை ஸ்வாதி (25–11–08) அன்று எண்பத்துநாலு திருநக்ஷத்திரத்தைப் பூர்த்திசெய்த இப்பெருந்தகை, ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஶனம் மூலமாகவும் மற்றும் பலவழிகளிலும் ஆற்றிய ஸம்ப்ரதாயப்பணிகளையும் நிகழ்த்திய சாதனைகளையும் நினைவு கூறுவோமாக.

திருமாலின் முழுமுதன்மை வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் பலவிடங்களில் காணப்படுகிறது. ஆதிகவியான வால்மீகி இதைத் தம் ஸ்ரீராமாயணத்திலும், வேதவியாசர் தம் மஹாபாரதத்திலும், பகவான் மனு–ஸ்ம்ருதிகளில் தலைசிறந்ததான தமது மனுஸ்ம்ருதியிலும், பராசரர் புராணங்களில் தலைசிறந்ததான புராணரத்நமாகிற ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் தெளிவாகப் பேசினார்கள். ''திருமாலாகிற நாராயணனே உலகனைத்தையும் படைத்துக் காத்துத் தன்னுள் ஒடுக்கி தன்னைத்தஞ்சமாக அடையும் உயிர்களுக்கு மோக்ஷம் அளிக்கும் முழுமுதல்வன்; மெய்யான உலகு அனைத்தும் அவனுக்கு ஶரீரம். அவன் உறையும் கோயில். அவன் அனைத்துக்கும் ஆத்மா'' என்னும் இந்த மதத்தையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் சங்ககாலத்தில் த்ரிதண்டி ஸந்யாஸிகளான முக்கோற்பகவர்களும், சங்ககாலச் சான்றோர்களும் வைதிகமதமாக நாடெங்கும் பரப்பினர். இவ்வுண்மையை சங்ககாலத்தமிழர் சமயம், சாதிமதஆராய்ச்சி–பரிபாடல்விளக்கம் முதலான தமது ஆராய்ச்சி நூல்களில் ஸுதர்ஶனர்ஸ்வாமி விளக்கியுள்ளார். பிற்காலத்தில் வேதத்தை ப்ரமாணமாக ஏற்றுக்கொள்ளாத பௌத்தம், ஜைனம் போன்ற மதங்களும், வேதத்தை ஏற்றுக்கொண்டாலும், மற்ற தெய்வங்களுக்கு முதன்மை கூறும்

மதங்களும் தமிழகத்தில் பரவத்தொடங்கின. அக்காலத்தில் ஆழ்வார்கள் அவதரித்து வைதிகமதமான விஶிஷ்டாத்வைத மதத்தை நிலைநாட்டினர். ஆழ்வார்களுக்குப் பின் கி.பி.எட்டாம் நூற்றாண்டில் சங்கரர், பாஸ்கரர், யாதவப்ரகாஶர் முதலானோர் தோன்றி, ''உலகம் பொய், ஜீவனும் பரம்பொருளும் ஒன்றே'' என்னும் அத்வைதம் முதலான மதங்களைப் பரப்பினர்; அந்நிலையில் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான பூர்வாசார்யர்கள் அவதரித்து தொன்மைமிக்க விஶிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தை பாரததேசமெங்கும் நிலைநாட்டிப் போந்தனர். அவர்களில் நடுநாயகமாய்த் திகழும் ஸ்ரீராமானுஜர் ப்ரஹ்மஸூத்ரம், பகவத்கீதை, உபநிஷத்துக்கள் எனப்படும் மூன்று ப்ரமாணநூல்களான ப்ரஸ்தானத்ரயத்துக்கும் வடமொழியில் விளக்கங்கள் எழுதி பரமவைதிகமதமான இந்த தர்ஶனத்தை நிலைநாட்டினார். மணவாளமாமுனிகள் ஈறான பூர்வாசார்யர்கள் காலம் வரையிலும் அதற்குப் பின்னர் பலஆண்டுகளிலும் இதே நிலை தொடர்ந்தது.

ஆனால் நமது நாட்டின் விடுதலைப்போராட்டத்தின் போதும், விடுதலையடைந்த பின்னரும் ''ஸர்வசமயசமரசம்'' ''மதஒற்றுமை'' என்னும் போர்வையில் வேதப்ரமாணம் காட்டித்தங்கள் மதங்களின் கொள்கைகளை நிலைநாட்டமுடியாதவர்கள் விஷ்ணுவைஷ்ணவத்வேஷ ப்ரசாரங்களைச்செய்து அவற்றின்மூலம் தங்கள் கொள்கைகளை வலியுறுத்தினர். பணபலமும், படை பலமும்மிக்க அவர்களுடைய பொய் வாதங்களைக் கண்டித்து உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டுதல், ஸ்ரீவைஷ்ணவபூர்வாசார்ய க்ரந்தங்களை அச்சிடுதல், அவற்றின் பொருளை எளிய நடையில் வெளியிடுதல் ஆகிய நோக்கங்களுக்காக புத்தூர் அட்வகேட் ஸ்ரீ.உ.வே.கி.ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியால் தம் குடும்ப ட்ரஸ்டின் ஆதரவில் ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம் என்ற மாதப்பத்திரிகை தொடங்கப்பெற்றது. நிறுவனஆசிரியரான அவருக்குப்பிறகு அவருடைய குமாரரான ஸ்ரீ.உ.வே.கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி (ஸுதர்ஶனர்) ஆசிரியப்பொறுப்பினை ஏற்றார்.

இப்பத்திரிகையின் வாயிலாக அவர் நிகழ்த்திய சாதனைகள் பலபல. ஸம்ப்ரதாயத்தைக் கசடறக்கற்றுப் பரப்பவல்ல பலஇளைஞர்களை ஊக்கும் விக்கும் முறையில் ஸுதர்சனம் இதழில் அவர்களைப் பற்றிய குறிப்புகளைக் கொடுத்து 'ஞானபுத்திரர்'களாக அறிமுகப்படுத்தினார். திவ்யதேஶங்களின் நலிவினைப் போக்கப் பாடுபடுவதற்காக விண்ணுளாரிலும் சீரியர் படை ஒன்றினைத் தோற்றுவித்தார். தாமே முன்னின்று பல ஸ்ரீவைஷ்ணவமாநாடுகளை நடத்தியதோடல்லாமல் பாரதமெங்கும் நடைபெற்ற பலமாநாடுகளிலும் பங்கேற்றுத் தமது கருத்துக்களைத் துணிவுடன் கூறிவந்தார். ஸுதர்சனம் பத்திரிகையில் பூர்வாசார்ய க்ரந்தங்களையும், அவற்றின் பொருளை –

வடமொழியறியாத பாமரர்களும் எளிதில் புரிந்துகொள்ளும்படி எளிய தமிழ் நடையில் விவரணங்களும் எழுதி வெளியிட்டார். அவ்வாறு எளிய நடையில் எழுதும்போது பூருவர்களின் உரையிலிருந்து ஒரு சிறிதும் பிறழாது அப்படியே மொழிபெயர்ப்புச்செய்வார். இவரது படைப்புக்களில் தலைசிறந்ததாக அறிஞர்களால் கொண்டாடப்படுவது பகவத்கீதை முழுவதற்கும் ராமாநுஜ பாஷ்யம், அதற்கு தேசிகனின் தாத்பர்ய சந்திரிகை ஆகியவற்றைக் கொண்டு எழுதிய எளியநடை விவரணமேயாகும். இதற்கு மேலும் ஒருசிறப்பாக வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் அருளிய பகவத்கீதை வெண்பா– பதவுரையுடன் கூட அச்சிடப்பட்டுள்ளது. தனிப்புத்தகங்களாக சோலைமலை குறவஞ்சி போன்ற தமிழ் நூல்களையும் பல ஸம்ப்ரதாய நூல்களையும் வெளியிட்டுள்ளார். அருளிச்செயல் அனைவரிடமும் சென்றடையவேண்டும் என்ற உயரிய நோக்கில் நாலாயிர திவ்யப்ரபந்தம்–ரூ80 விலையில் அளித்து வருகிறார்.

தமிழ்ப்புலவர்களில் சிலர் ''கம்பனின் சமயம் வைணவமே'' என்னும் பேருண்மையை மறைத்து அவனைச் சைவனாகச் சித்திரித்தனர். நூற்றுக்கணக் கான கம்பராமாயணப் பாடல்களை மேற்கோளாகக்காட்டி, எதிரிட்டோர் வாதங்களை முறியடித்து, சடகோபர் அந்தாதி பாடிய கம்பன் ஆழ்வார்கள் வழிவந்த பிறவி வைஷ்ணவனே என நிரூபித்து 'கம்பனின் சமயம்' என்னும் நூலையும் வெளியிட்டார். பொதுஜனப்பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி, வானொலி முதலான ஊடகங்களிலும் இந்துமதக்கருத்துக்களாக சைவமதக் கருத்துக்களும், இதரதெய்வங்களின் பாடல்களுமே வெளிவந்த போது அதற்கு எதிராகக் குரல்கொடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதி வைணவமதக்கோட்பாடுகளும், பாடல்களும் இடம்பெறச்செய்தார். மேற்படி ஊடகங்களில் அவ்வப்போது இடம்பெறும் விஷ்ணுவைஷ்ணவ தூஷணக் கருத்துக்களை உடனுக்குடன் ஆதாரத்துடன் கண்டித்து வந்தார். தீபாவளி கார்த்திகை போன்ற பண்டிகைகளை சிவனுடன் தொடர்புபடுத்தி காமகோடி போன்றோர் தவறான விளக்கங்களை அளித்தபோது தக்க ஆதாரங்க ளுடன் அவை விஷ்ணுவோடு தொடர்புகொண்டவிழாக்களே என நிலைநாட்டி னார். ஸுதர்சனர் பதில்– பகுதியின் வாயிலாக இவருடைய விளக்கங்கள் இளைஞர்கள் பலரை ஈர்த்துள்ளன. விஷ்ணுவைஷ்ணவத்ரோகிகளான அக்னிஹோத்ரி போன்றவர்களின் அபத்த வாதங்களை வன்மையாகக் கண்டித்துள்ளார். பிராட்டி விஷயத்தில் ''பிராட்டி எம்பெருமானுக்கு ஶரீரமாயிருந்தபோதிலும் அவள் எம்பெருமானோடு எல்லாவிதத்திலும் துல்யமான பரப்ரஹ்மமே'' என்பது தேசிகன் உகந்த பக்ஷமல்ல. மாறாக தேசிகன் ''பிராட்டிக்கு பெருமானோடு துல்யமான ஈஶ்வரத்தையோ, ப்ரஹ்மத்வத்

தையோ கூறவில்லை. பெரியபிராட்டியாரை எம்பெருமானுக்கு ஶரீரமாய், அவனால் நியமிக்கப்படுபவளாய், தரிக்கப்படுவபவளாய், அவனுக்கு ஶேஷபூதையான தத்வமாகவும், எம்பெருமான் நீங்கலான உபயவிபூதிக்கும் ஶேஷியாகவும் இருக்கையாலே ஈஶ்வரவகுப்பைச் சேர்ந்தவளாக மட்டுமே அருளிச்செய்திருக்கிறார்'' என்று தேசிக ஸ்ரீஸூக்திகளைப்பட்டியலிட்டு நிலைநாட்டினார். இவ்விஷயத்தில் முத்தாய்ப்பாக ஸுதர்சனர் எடுத்துக் காட்டியுள்ள திருவெள்ளறை ஸ்தலபுராணப்பகுதி அனைவருடைய கலக்கத்தையும் நீக்கும். ''திருவெள்ளறைப் பதிகத்தின் இறுதியில், 'போதமர் செல்வக் கொழுந்து புணர் திருவெள்ளறையானை'' (பெரியாழ்.திரு 2–8–10) என்று அருளுகிறார் பெரியாழ்வார். இவ்விடத்திற்கு வ்யாக்யானம் செய்த மணவாளமாமுனிகள் போதமர் செல்வக்கொழுந்து– பங்கச்செல்வி என்றிறே திருநாமம், புணர்திருவெள்ளறையானை–அவள் தாமரைப்பூவை மறந்து 'அகலகில்லேன்' என்கிறபடியே க்ஷணகாலமும் பிரியமாட்டாதே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணும்படியாய்க்கொண்டு திருவெள்ளறையில் நிற்கிறவனை. கோல்தேடியோடும் கொழுந்து (இரண் திரு 27) என்கிறபடியே – கொழுந்தானதொன்று, உபக்₄நத்தை(கொள்கொம்பை)யொழிய தரிக்கமாட்டாதாற்போலேயாய்த்து, போதமர் செல்வக்கொழுந்தான இவளும் திருவெள்ளறையானாகிற உபக்₄னத்தோடே புணர்ந்தாலல்லது தரிக்கமாட்டாதபடி. உபக்₄நம் ஆதாரமாய் நிற்கும் மாத்ரமாய், அதின் மேல் படர்ந்த கொடியே ப்ரதாநமாய் இருக்குமாப்போலேயாய்த்து, செந்தாமரைக் கண்ணர் அப்ரதாநராய், இவளே அவ்வூருக்கு ப்ரதாநையாயிருக்கும்படி'' என்பதே அப்பகுதி.

ஸுதர்சனர் திவ்யதேச ரக்ஷணத்திலும் வெகுவாக ஈடுபட்டிருந்தார். 5–1–70 அன்று அரசு ''இந்துக் கோயில்களின் உட்பகுதியிலும் பிறமதத்தவர் நுழையலாம் என்று உத்தரவு பிறப்பித்தது. 'அர்ச்சகர் பரம்பரை ஒழிப்புச் சட்டம்' ஒன்றையும் நிறைவேற்றியது. இவற்றை எதிர்த்துப் போராட ஸுதர்சனர் வழக்கு நிதி வசூலித்து 25–1–71 அன்று அந்த சட்டத்தை எதிர்த்து ரிட் மனுக்கள் தாக்கல் செய்ய ஏற்பாடு செய்தார். திருச்சி டவுன்ஹாலில் கண்டனப் பொதுக்கூடத்திலும் கலந்து கொண்டார். இந்த ரிட் மனுக்கள் மீது டில்லி உச்சநீதிமன்றம் 14–3–72 அன்று தீர்ப்பு வழங்கியது. அதில், ''ஆகமங்களுக்கும், அவைகளில் நிலைநாட்டப்பட்ட கோயில் பூஜா விதிகளுக்கும், எந்த வகுப்புகளிலிருந்து அர்ச்சகர்களை விதிக்கும் ஆகமவிதிகளுக்கும் முரணாக அரசு குறுக்கிடுமானால், அக்குறுக்கீடு அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்ட மதப்பாதுகாப்புக்கு முரணாகுமாகையால் செல்லத் தகாததாகும்'' என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின் முழுவிபரம் ஸுதர்சனம் 292 (25–4) இதழில் ப்ரசுரிக்கப்பட்டுள்ளது.

திருப்பதி திருவேங்கடவன் சிவன் சக்தி சுப்பிரமணியன் ஆகியோர் ஒருங்கே அமைந்த மூர்த்தி என்று காமகோடி பீடாதிபதி மற்றும் பலர் பிரசாரம் செய்தபோது அவர்களது துர்வாதங்களுக்கு சங்கஇலக்கியங்களை ஆதாரமாகக்காட்டி 'திருவேங்கடவன் திருமாலே' என் நிலைநாட்டி அவர்களுடைய வாதங்களை தவிடுபொடியாக்கினர். தெற்குத் திருமலையாம் திருமாலிருஞ்சோலையை சைவர்கள் ஆக்ரமித்து பழமுதிர்சோலையாக மாற்ற முயன்றபோது தானே நேரடியாகத் தலையிட்டு மதுரை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து நீதியை நிலை நாட்டினர்.

தில்லைத்திருச்சித்ரகூடத்தில் நடைபெற்றுவந்த ப்ரஹ்மோத்சவம் சைவர்களின் ஆதிக்கத்தால் தடைபட்டுள்ளது, அது மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என்றும் அதற்கு இடையூறு செய்பவர்களின் முயற்சி தகர்க்கப்பட வேண்டும் என்றும் குரல் கொடுத்துவருகிறர்.

இப்படிப்பல அரும்பணிகள் ஆற்றிவரும் ஸுதர்சனர்ஸ்வாமியின் ஸம்ப்ரதாயப்பணி இனி வரும் ஆண்டுகளிலும் தொய்வின்றி நடைபெற எம்பெருமான் அருளவேண்டும் என்றும், அவருக்கு உடல்நலம் உள்ளிட்ட எல்லா நலன்களும் பெருகவேண்டும் என்றும் ப்ரார்த்திக்கிறேன்.

## புத்தூரில் வந்துதித்த புண்ணியன்
### ஆசிரியர் ரகுராமன்

*ஶ்ரிய:*பதியான எம்பெருமான் சேதநர்கள் அனைவரும் உய்வுபெற வேண்டுமென்பதற்காக, சேதனர்கள் இறகொடிந்த பறவைபோலே உடலும், உறுப்புகளும் இல்லாதிருந்த ஸ்ருஷ்டிகாலத்திலே அவர்களுக்கு உடலையும் இந்த்ரியங்களையும் கொடுத்தான். நல்லது தீயதுகளைப் பகுத்துணர ஶாஸ்த்ரங்களை அருளினன். தானே பற்பல அவதாரங்களைச் செய்து, தன்னிடத்தில் அனைவருக்கும் ருசி ஏற்படுத்த முயன்றான். இப்படி நாட்டில் பிறந்து படாதனபட்டும், திருந்தாத மனிதர்களைத் திருத்துவதற்காக அவ்வப்போது ஜ்ஞானிகளை அவதரிக்கச்செய்கிறன். இதனை

யத$_3$ா யத$_3$ா ஹி த$_4$ர்மஸ்ய க்$_3$லாநிர் ப$_4$வதி ப$_4$ாரத।
அப்$_4$யுத்த$_2$ாநமத$_4$ர்மஸ்ய தத$_3$ாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்॥

என்ற கீதா (4–7) ஶ்லோகம் கொண்டு அறியலாம். எப்போதெல்லாம் தர்மத்திற்கு வாட்டம் ஏற்பட்டு அதர்மம் தலையெடுக்கிறதோ, அப்போதெல்லாம் 'ஆத்மாநம் ஸ்ருஜாமி' (என்னைப் படைக்கிறேன்) என்றான் கீதாசார்யன். ஆத்மாநம் ஸ்ருஜாமி என்பதற்கு ''நான் எனது உயிரான ஜ்ஞாநியைப் பிறப்பிக்கிறேன்'' என்பதே கருத்தாகும். ''ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்'' (கீதை 7–18) என்றவிடத்தில் 'ஜ்ஞாநியே எனக்கு ஆத்மா (உயிர்) என்பது என்

முடிவு’ என்று கீதாசார்யன் தானே அருளிச்செய்தானல்லவா. ஆதலால், ‘என்னைப்படைக்கிறேன்’ என்றால் எனதுயிரான ஜ்ஞாநியைப்பிறப்பிக்கிறேன் என்றே பொருளாகும்.

இப்படிப்பட்ட ஜ்ஞானிகளின் வரிசையில் ஒருவராக எண்ணத்தகுந்தவ ராய் எழுந்தருளியிருப்பவர் புத்தூர் ஸுதர்ஶநர் ஸ்வாமி. புத்தூர் ஸ்வாமியின் ப்ரபாவம் யான் சொல்லும் நீர்த்தல்ல.

ஆகிலும் ‘கு$_3$ரும் ப்ரகாஶயேத் தீ$_4$மாந்’ (அறிவாளியானவன் ஆசார்யனை வெளிப்படுத்தக்கடவன்), ‘‘ப்ரத்யக்ஷே கு$_3$ரவஸ் ஸ்துத்யா:’’ (நேரில் துதிக்கத்தக்கவர்கள் ஆசார்யர்கள்) ‘‘கு$_3$ரோர் நாம ஸதா$_3$ ஜபேத்’’ (சீடனானவன் ஆசார்யனின் திருநாமத்தை எப்போதும் சொல்லக்கடவன்) முதலான ப்ரமாணங்களில் ஆசார்யவைபவம் அவஶ்யம் சொல்லப்படவேண்டு மென்றும், குருவின் நாமம் ஜபிக்கப்படவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ள படியால், அடியேனுடைய ஜ்ஞாநாசார்யரான ஸுதர்ஶநர்ஸ்வாமியைப் பற்றி ஏதோ சிலவார்த்தைகளைச் சொல்லி ஸத்தை பெறலாமென்று ஸாஹஸ க்ருத்யத்தில் இழிகிறேன்.

முதற்கண் ஸ்வாமிக்கும் அடியேனுக்குமுள்ள ஸம்பந்தத்தைப் பற்றிச் சில வார்த்தைகள். ஸுதர்ஶனர் ஸ்வாமியின் திருமாளிகைக்கும், அடியோங்களுக்கும் எட்டுத்தலைமுறைகளாக நெருங்கிய ஸம்பந்தமுண்டு. ‘(ஸுதர்ஶனஸ்தாபகர்) ஸ்வாமியின் தாதபாதர்களும், அடியேனுடைய முன்னோர்களும் ஆறுதலைமுறை யாக அத்யந்தஸ்நேஹபாவத்தோடு இருந்தனர்’ என்பதை அடியேனுடைய பிதாமஹர் ஸ்ரீ.உ.வே.M.S.ராமய்யங்கார்ஸ்வாமி 55 வருடங்களுக்கு முன்னர் ஸுதர்ஶனஸ்தாபகரின் நினைவு மலரில் குறிப்பிட்டுள்ளார்.

அறுபது ஆண்டுகட்கு முன்பு ஸுதர்ஶனர் ஸ்வாமியிடமும், அவருடைய திருத்தகப்பனாரிடமும் காலக்ஷேபம் கேட்டவர் அடியேனுடைய பிதாமஹர். அடியேனுடைய பிதாமஹருக்குக் காலக்ஷேபம் ஸாதித்ததோடு நில்லாமல், பொருளல்லாதவென்னைப் பொருளாக்கியடிமை கொண்டவர் ஸுதர்ஶனர் ஸ்வாமி. ஸத்ஸம்ப்ரதாய க்ரந்தங்களை அடியேனுக்கு வரியடைவே காலக்ஷேப மாக ஸாதித்தவர் நம்ஸ்வாமி.

முந்துறமுன்னம் திருமந்த்ரார்த்த காலக்ஷேபமே தொடங்கப்பெற்றது. த்வயப்ரகரண வ்யாக்யானம் வரை காலக்ஷேபம் ஸாதித்துவிட்டு, அதன் பின்னர் ஒன்றரை ஆண்டுகள் அச்சுத்தாள்களை ஒப்பிடுதல் முதலான பணிகளைக் கொண்டு, பின்பே சரமஶ்லோகப்ரகரண வ்யாக்யானத்தைத் தொடங்கினார். அதிகாரியைப் பரீக்ஷித்தே சரமஶ்லோகார்த்தத்தைச் சொல்லவேண்டும் என்பது ஸ்வாமியின் அபிப்ராயம். மேலும் அடியேன் சிறுவயதிலேயே காலக்ஷேபம் கேட்கத்தொடங்கியதால், சிறிதுகாலம் கழித்து சரமஶ்லோகார்த்தம் சொல்லலாம்

என்பதும் காரணமாயிருக்கக்கூடும். அதன் பின்னர் தொடர்ந்து சிலக்ரந்தங்களை வரியடைவே ஸாதித்தார். அடியேன் சிறுவயதினனுனபடியால், அரும்பொருள் களையும் அடியேனுக்குப் புரியும்படி மிக எளிமையாக ஸாதித்தார். அவர் செய்த உபகாரங்களுக்கு ப்ரதியாக அடியேனல் எதுவும் செய்யவியலாது. ஸ்வரூபத்திற்குச்சேர, 'என்னைத்தீமனங்கெடுத்தாய்', 'மருவித்தொழும்மனமே தந்தாய்' என்று அநுஸந்தித்து நிற்கலாமத்தனை. ஸ்வாமியின் பெருமையைப் பற்றி சிறிது விண்ணப்பித்து மேலே அவரது சாதனைகள் சிலவற்றைப்பற்றிக் கூறுகிறேன்.

'கற்றவர்காமுறுசீலன்' என்னும்படியிருப்பவர் நம்ஸ்வாமி. ஒருஸமயம் சென்னை மாநகரத்தில் உபந்யாஸம் செய்யும்போது, பெருமாள்கோவில் ஸ்ரீ.உ.வே.ப்ரதிவாதிபயங்கரம் அண்ணஸ்வாமி ''கொன்றுயிருண்ணும் விசாதிபகைபசிதீயனவெல்லாம் நின்றிவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான் தமர் போந்தார்'' என்ற பாசுரத்தைப் புத்தூர்ஸ்வாமி பரமாக நிர்வஹித்தாராம். இப்பாசுரம் 'பொலிகபொலிக' என்னும் திருவாய்மொழியில் உள்ளதாகும். இத்திருவாய் மொழியின் ஸாரத்தை ஆசார்யஹ்ருதயத்தில் கூறுகையில் ''அடிமைபுக்காரையும் ஆட்செய்வாரையுங்காண லோகத்$_3$வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர்குழாங்களைக் கண்டு காப்பிட்டு'' என்று காட்டினர் நாயனர். 'ஒன்றுந்தேவும்' என்ற திருவாய்மொழியில் தேவதாந்தரங்களின் தாழ்வையும், எம்பெருமானின் மேன்மையையும் எடுத்துரைத்து, அதனுல் ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்றும்படி செய்தார் நம்மாழ்வார். ஆழ்வாராலே திருத்தப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களையும், திருத்தியவரான ஆழ்வாரையும் காண்பதற்காக 'தேவர்கள் தாமும் புகுந்து'' என்றும், ''நேமிப்பிரான் தமர் போந்தார்'' என்றும் சொல்லுகிறபடியே நித்யஸூரிகள் லோகாந்தரத்திலிருந்து வந்தனராம். ச்வேதத்வீபவாஸிகளும் வந்தனராம். அவர்களை 'பொலிகபொலிக' என்ற திருவாய்மொழியில் மங்களாஶாஸநம் பண்ணுகிருர் ஆழ்வார் என்பது ஆளவந்தாரின் நிர்வாஹம்.

நேமிப்பிரான் தமர் என்பதற்கு ஆசார்யஹ்ருதய வ்யாக்யானத்திலும், ஈட்டின் அரும்பதத்திலும் 'நித்யஸூரிகள்' என்று பொருளுரைக்கப்பட்டுள்ளது. புத்தூர்ஸ்வாமியின் பெருமையைப் பார்க்குங்கால், 'இவர் நித்யஸூரிகளின் திரளிலிருந்து வந்தார் ஒருத்தரோ' என்று ஶங்கிக்கலாம்படியிருக்கையாலே இவரை அண்ணஸ்வாமி 'நேமிப்பிரான்தமர்' என்ருர் போலும். 'சென்று தொழுதுய்ம்மின் தொண்டீர்' என்கிறபடியே இப்படிப்பட்ட வைபவம்படைத்த புத்தூர்ஸ்வாமியியைத் தொழுதுஉய்யவேண்டியதே நமக்குக் கர்த்தவ்யமாகிறது.

கோயிலில் (திருவரங்கத்தில்) ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஶனம் பத்திரிகைக்கு

வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றபோது ஸுதர்ஶநர்ஸ்வாமிக்கு ''திவ்யார்த்தரத்நநிதி'' என்ற பிருதளித்தார் காஞ்சீஸ்வாமி.

நம்மாழ்வாரை வேதார்த்தரத்நநிதி என்றுர் ஆழ்வான். புத்தூர் ஸ்வாமியை திவ்யார்த்தரத்நநிதி என்றுர் அண்ணுஸ்வாமி. ரத்நாகரமான கடலே ரத்நநிதியாகும். கடலானது விலைமதிப்பற்ற ரத்நங்களைத் தன்னகத்தே கொண்டிருக்குமாப் போலே சீரிய அர்த்தவிஶேஷங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பவர் ஸுதர்ஶனர் ஸ்வாமி. வேதஶாஸ்த்ரங்களில் அஸாரமாகவும், அல்பஸாரமாக வும், ஸாரமாகவும், ஸாரதரமாகவுமுள்ள அர்த்தங்கள் போக ஸாரதமங்களாக வுள்ள அர்த்தங்களே ரத்நங்களாகும். அப்படிப்பட்ட ஸாரதமங்களான திவ்யார்த்தங்களைத் தம்மிடம் கொண்டிருப்பவர் புத்தூர்ஸ்வாமி என்பது அண்ணுஸ்வாமி அளித்த பிருதினுலே புலப்படுகிறது.

ஒருஸமயம் ஸ்ரீராமாநுஜன் (375) பத்திரிகையில், 'பூனுநகரத்திற்கு அருகில் கோல்ஹாபூர் ஜில்லாவில் வாயீ என்னும் இடத்தில் வஸித்த அப்பாசர்மவித்யாவாசஸ்பதி எப்படி அக்காலத்தில் ஆர்யஸமாஜிகளின் விபரீத ப்ரசாரங்களை, மறுவாய்திறக்க முடியாதபடி தாக்ஷிண்யம் பாராமல் கண்டித்து எழுதினுரோ, அதுபோல் இக்காலத்தில் புத்தூர்ஸ்வாமி ப்ரதிபக்ஷிகளின் துர்வாதங்களைத் தொலைக்க முன்வராமல் போயிருப்பரேயானுல், உண்மையில் நாட்டாருக்கு மிகுந்த கலக்கங்கள் உண்டாகியேயிருக்கும்' என்று பொருள்படும் படி எழுதியிருந்தார் அண்ணுஸ்வாமி.

30–09–58இல் அண்ணுஸ்வாமி, ஸுதர்ஶனர்ஸ்வாமிக்கு எழுதிய ஸ்ரீமுகத்தில் ''திருத்தகப்பனுர் திருநாடலங்கரித்தபோது, இனி வெளியீடுகள் மோசமாகத் தான் இருக்குமென்று ஸஹஸா நினைத்துவிட்டேன். 'ப$_4$ாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந த$_4$ர்மஜ்ஞேந ச லக்ஷ்மண। த்வயா புத்ரேண த$_4$ர்மாத்மா ந ஸம்வ்ருத்த: பிதா **மம**' என்று பெருமாள் சொன்ன வார்த்தையை அடிக்கடி நினைத்து உருகும்படியாகப் பண்ணிவிட்டாய். பிதா எழுந்தருளியிருந்தால் இவ்வளவு காரியம் நடந்திராதென்று கூடச் சொல்லுவேன். 'நாவலம் பெரியதீவினில் வாழும் நங்கைமீர்கள் இதோர் அற்புதம் கேளீர்' என்று சொல்லத்தக்க காரியங்களையே செய்து வருகிறுய்'' என்றெழுதியிருந்தார்.

புத்தூர்ஸ்வாமியின் பதிப்பில் குற்றம் எதுவுமே தென்படவில்லை என்பதை அண்ணுஸ்வாமி 16–3–61ல் ஸுதர்ஶனருக்கு அநுக்ரஹித்த ஸ்ரீமுகத்தில் ''இந்தப் புரோபாகிக்கு எதுவும் கிடைக்கவில்லை'' என்று குறிப்பிட் டிருந்தார். காஞ்சீஸ்வாமி இயற்றிய ஸ்தோத்ரவ்யாக்யானங்கள் அனைத்தும் அடங்கிய ஸ்ரீகோஶமொன்று ஸுதர்ஶனர்ஸ்வாமியிடம் உள்ளது. அதில் ப்ரதிவாதிபயங்கரம்ஸ்வாமி க்ரந்தாக்ஷரத்தில் 'ஸ்ரீமதே ஆயுஷ்மதே வித்வச்சி$_2$ரோ மணயே ஸ்ரீக்ருஷ்ண ஶர்மணே ப்ர.அ.விரசித ஸகல ஸ்தோத்ர வ்யாக்யான

மாலிகா ஸப்ரமோதம் அர்ப்யதே 25–3–1972, என்று எழுதியுள்ளார். இதில் ஸுதர்ஶனர்ஸ்வாமியை வித்வான்களுக்குத் தலையில் தரிக்கத்தக்க மணி போன்றவர் என்று பொருள்பட ‘வித்வச்சிரோமணி’ என்றெழுதியது குறிப்பிடத் தக்கது. இரண்டுமுறை விவாதத்தில் புத்தூர்ஸ்வாமியை எதிர்த்தவரான காஞ்சீ ஸ்வாமியே ‘சங்கரரும் வைணவமும்’ என்ற ஸுதர்ஶனரின் நூலைப்படித்த வுடன், வாதசர்ச்சையில் இறங்கும் பண்டிதர்கள் புத்தூர்ஸ்வாமியின் வழியைப் பின்செல்வது நல்லதென்று ஸ்ரீராமாநுஜன் 269ல் குறிப்பிட்டுள்ளார்.

**ஆதிசங்கரர் வைணவரே என்று நிலைநாட்டியமை**

முன்பொருசமயம் ஆனந்தவிகடன் தீபாவளி மலரில் ‘பாலாதாசன்’ என்ற புனைப்பெயருடைய ஒருவரால் ‘வைணவம்’ என்றதலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அதில் க₃ாணபத்யம், கௌமாரம், சைவம், சாக்தம், வைஷ்ணவம், சௌரம் என்று ஆறுமதங்களும் இந்நாட்டில் ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்டதாகவும், அவற்றுக்கு ஷண்மதங்கள் என்று பெயர் என்றும் எழுதப்பட்டிருந்தது.

அச்சமயத்தில் ஸுதர்ஶனர்ஸ்வாமி ‘‘ஆதிசங்கரர் ஷண்மத ஸ்தாபகரா?’’ என்ற நூலை இயற்றி, அதில் ஆதிசங்கரர் ஆறுமதங்களை ஸ்தாபிக்கவில்லை என்றும், ‘ஆதிசங்கரர் வைணவரே’ என்றும் பற்பல ஆதாரங்களைக்காட்டி நிரூபித்தார். மேலும் அத்வைதிகளைக் குறித்துக் கேள்விகளும் கேட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து ஸுதர்னருக்கும் வரஹூர் கல்யாணஸுந்தரஶாஸ்த்ரிகளு க்குமிடையே விவாதம் விளைந்தது. அப்போது ஸுதர்ஶனர் ‘சங்கரரும் வைணவமும்’ என்ற நூலை வெளியிட்டு வைணவஉலகுக்கு மஹோபகாரம் செய்தருளினர். இந்நூலைக் கண்ட கோலார் அவந்தி பீடாதிபதியாயிருந்த ஆரோக்யாச்ரமத்தலைவர் வேங்கடேஶ்வராநந்தா என்ற அத்வைத ஸந்யாஸி யொருவர் ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஶனம் ஆசிரியருக்கு ‘‘வித்யாவிஶாரத’’ என்ற விருதினை அளித்து, ‘‘சங்கரரும் வைணவமும்’’ என்னும் நூல் எடைக்கு எடை தங்கம் மதிப்புடையது என்று எழுதியிருந்தார்.

அப்புத்தகத்தில் புத்தூர்ஸ்வாமியின் நிர்ணயத்தைக் காண்போம். பண்டைக்காலத்தில் ஷட்தர்சனங்கள் என்று 1.பௌத்தம், 2.சமணம், 3.ஸாங்க்யம், 4.நையாயிகம், 5.வைஶேஷிகம், 6.பதஞ்சலியோகமதம் என்ற ஆறு மதங்களே கூறப்பட்டுவந்தன. இவர்கள் கூறும் க₃ாணபத்யம் முதலியவற்றைப் பழங்காலத்தில் எவரும் ஷண்மதம் என்று கூறியதேயில்லை.

ஆதிசங்கரரும், அவருக்கு ஸமீபத்திலிருந்த வார்த்திக டீகாகாரர்களும் நாராயணனையே ஸகுணப்ரஹ்மமாகக் கொண்டிருந்தனர். சிவன், விநாயகன், ஸூர்யன் முதலான தேவர்களை அவர்கள் ஜீவர்களாகவே கருதினர். இப்படியிருக்க ஶிவன், ஶக்தி, முருகன், பிள்ளையார், ஸூர்யன் என்னும்

தெய்வங்களை முழுமுதற்பொருளாகக் கொண்ட மதங்களை எப்படி அவரே நிலைநாட்டமுடியும். புருஷனைப் பரம்பொருளாகக் கொண்டமதத்தையும், மனைவியைப் பரம்பொருளாகக் கொண்ட மதத்தையும், பிள்ளைகள் இருவரையும் பரம்பொருளாகக்கூறும் இரண்டு மதங்களையும் ஒருவரே ஸ்தாபித்தார் என்பது சிரிக்கத்தக்கது. சங்கரர் தமது பாஷ்யநூல்களில் நாராயணனையே உயர்ந்த தெய்வம் என்று உரைத்தார். துதிநூல்களில் சிவன் முதலானவர்களை அவர் பரம்பொருளாகக் கூறியுள்ளாரே எனில், அந்தத் துதிநூல்கள் ஆதிசங்கரர் காலத்திற்குப் பிறகு சுமார் 800 ஆண்டுகள் வரை எவராலும் கையாளப்படாமையாலும், அப்பய்யதீக்ஷிதர் காலத்திலிருந்தே காணப்படுவதாலும் பிற்காலத்தில் சங்கரமடத்தின் பீடத்தை ஏற்ற சங்கராசார்யர்கள் இயற்றிய துதி நூல்களேயாகும். இனி ஆதிசங்கரர் உபநிஷத், ப்ரஹ்மஸூத்ர, கீதா பாஷ்யங்களில் நாராயணனையே பரம்பொருளாகக் கூறியதைக் காண்போம்.

1. ஆதிஶங்கரர் ப்ருஹதாரண்யகத்தில் (3–7–3) ''ய: ப்ருதி$_2$வ்யாம் திஷ்ட$_2$ந்'' என்னும் வாக்யத்தை விவரிக்கும்போது '' ய: – ஈத்$_3$ருகீ$_3$ஶ்வரோ நாராயணாக்$_2$ய:, ப்ருதி$_2$வீம் – ப்ருதி$_2$வீ தே$_3$வதாம், யமயதி–நியமயதி....ஏஷ தே ஆத்மா–தே, தவ, மம ச ஸர்வபூ$_4$தாநாம் ச இத்யுபலக்ஷணார்த்த$_2$மேதத்'' (இப்படிப்பட்ட ஈஶ்வரனை நாராயணன் என்னும் பெயரையுடைய தேவனே ப்ருதிவீ தேவதையை உள்ளே நின்று கொண்டு நியமிக்கிறான். அவனே உனக்கும் எனக்கும் எல்லா பூ$_4$தங்களுக்கும் ஆத்மா) என்று மூலத்தில் ப்ரஹ்மத்தின் பெயர் குறிப்பிடப்படாமலிருந்தபோதிலும் நாராயணனே பரம்பொருள் என்று சங்கரர் உரையிட்டார். இவ்விடத்து வார்த்திகத்திலும் சங்கரர் வ்யாஸ ஸித்தாந்தத்தை அநுஸரித்து நாராயணனையே மேலான தெய்வமாகக் கொண்டிருந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

2. ப்ரஹ்மஸூத்ரத்தில் 'உத்பத்த்யஸம்ப$_4$வாத்' (2–2–4) என்னும் ஸூத்ர பாஷ்யத்தில் ஆதிஶங்கரர் ''தத்ர யத்தாவது$_3$ச்யதே யோऽஸௌ நாராயண: பரோऽவ்யக்தாத் ப்ரஸித்$_3$த$_4$: பரமாத்மா ஸர்வாத்மா ... இதி தந்ந நிராக்ரியதே।'' (நாராயணன் அவ்யக்தத்தைக் காட்டிலும் மேலானவனென்றும், பரமாத்மாவென்றும், ஸர்வாத்மா என்றும் கூறுவதை நாம் மறுக்கவில்லை) என்றார்.

3. கீதாபாஷ்யத்தின் ஆரம்பத்தில் ''ஆதி$_3$கர்த்தா நாராயணாக்ய:'' என்று உலகிற்கெல்லாம் ஆதிகர்த்தா நாராயணன் என்றார் ஶங்கரர்.

4. கீதாபாஷ்யம் (6–47) ''யோகி$_3$நாமபி ஸர்வேஷாம்–ருத்$_3$ராதி$_3$த்யாதி$_3$ பராணாம், மத்$_3$க$_3$தேந – மயி வாஸுதே$_3$வே ஸமாஹிதேந, அந்தராத்மா– அந்த: கரணேந, ஶ்ரத்$_3$த$_4$ாவாந்– ஶ்ரத்$_3$த$_4$ாந:– ஸந் ப$_4$ஜதே– ஸேவதே யோ மாம் ஸ மே– மம, யுக்ததம: –அதிஶயேந யுக்த:, மத:– அபி$_4$ப்ரேத: இதி (ருத்ரன், ஸூர்யன் முதலானவர்களிடம் பக்தி செலுத்தும் யோகிகளைக் காட்டிலும்

(கண்ணனுகிற) என்னிடத்தில் நெஞ்சு செலுத்தியவனுய், ஶ்ரத்தையை உடையவனுய் எவனெருவன் என்னை ஸேவிக்கிருனே அவனே மிகச் சிறந்த யோகி என்று என்னுல் கருதப்படுகிருன்) என்று கூறியதால் நாராயணனைத் தவிர மற்ற தெய்வங்களை உபாஸிப்பவர்கள் சிறந்தவர்கள் அல்லர் என்று ஆதிஶங்கரர் கருதுகிருர் என்பது தெளிவாக விளங்குகிறது.

5. அத்வைதியான நாராயண பட்டர் தாமியற்றிய நாராயணீயத்தில் (90–5)

ஶ்ரீ ஶங்கரோऽபி ப$_4$க$_3$வாந் ஸகலேஷு தாவத்
த்வாமேவ மாநயதி யோ ந ஹி பக்ஷபாதீ।
த்வந்நிஷ்ட$_2$மேவ ஸ ஹி நாம ஸஹஸ்ரகாதி
வ்யாக்$_2$யத்$_3$ப$_4$வத் ஸ்துதிபரஶ்ச க$_3$திம் க$_3$தோऽந்தே॥

(பகவத்பாதராகிற ஆதிசங்கராசார்யர் தன்னுடைய எல்லா நூல்களிலும் நாராயணனுகிற உன்னையே ஸகுணப்ரஹ்மமாகக் கூறி கௌரவிக்கிருர். ஸஹஸ்ரநாமம், கீதை, உபநிஷத்துக்கள் ப்ரஹ்மஸூத்ரம் முதலானவற்றை, உன்னைச் சொல்லுவதாகவே அவர் வ்யாக்யானம் செய்திருக்கிருர். இறுதிக்காலத்தில் உன்னைப்பற்றிய துதியைச்செய்தே மோக்ஷமடைந்தார்.)

இந்த ஶ்லோகத்திற்கு தேஶமங்களவர்யர் என்ற அத்வைதியால் இயற்றப்பட்ட ஸம்ஸ்க்ருத வ்யாக்யானத்தில் "கிஞ்ச। ஶ்ரீஶங்கர: ப$_4$க$_3$வத்$_3$ பாத$_3$ாசார்ய:। த்வந்நிஷ்டம் விஷ்ணுபரம்। நாமஸஹஸ்ரகாதீ$_3$தி।ஆதி$_3$ ஶப்$_3$தே$_3$ந ஶ்ரீகீ$_3$தாதி$_3$ க்$_3$ருஹ்யதே।ஸோऽபி தது$_3$ப$_4$யமபி ஶிவபரதயா வ்யாக்$_2$யாதும் ஶக்யமபி விஷ்ணுபரதயைவ வ்யாக்$_2$யாதவாந்। அந்தே ச ப$_4$வத்ஸ்துதிபர: ஶ்ரீமத்பாத$_3$ாதி$_3$கேஶ ஸ்துதிம் குர்வந் க$_3$திம் மோக்ஷம் க$_3$த:, ந து ஶிவஸ்துதிபர:॥" **ஶ்ரீஶங்கர:** – பகவத்பாதாசார்யர், **த்வந்நிஷ்டம்** – விஷ்ணுபரமாக, **நாமஸஹஸ்ர காதி$_3$** என்றவிடத்தில் ஆதி$_3$ஶப்$_3$த$_3$த்தாலே ஶ்ரீகீதை உபநிஷத், ப்ரஹ்மஸூத்ரம் முதலானவை உணர்த்தப்படுகின்றன. அவ்வாதிஶங்கராசார்யரும் ஸஹஸ்ரநாமம் கீதை முதலானவற்றை (அப்பய்ய தீக்ஷிதர் செய்தது போலே வலிந்தும் நலிந்தும்) ஶிவபரமாக வ்யாக்யானம் செய்யலாமாயினும் விஷ்ணுபரமாகவே வ்யாக்யானம் செய்தார். கடைசிக்காலத்திலும், **ப$_4$வத்ஸ்துதி பர:** – உன்னைப் பற்றிய ஶ்ரீவிஷ்ணு பாத$_3$ாதி$_3$கேஶஸ்துதியைச் செய்தே மோக்ஷத்தை அடைந்தார். ஶிவஸ்துதியைச் செய்து மோக்ஷத்தை அடையவில்லை.) என்று கூறப்பட்டுள்ளது.

வேதாந்ததேஶிகன் கீதாபாஷ்யத்திற்குத் தாமியற்றிய தாத்பர்ய சந்த்ரிகையின் ஆரம்பத்தில் கீதைக்கு உரையிட்டோர் அனைவரையும் குறிப்பிட்டு, அவர்கள் அனைவரும் நாராயணனையே மேலான தெய்வமாகக் கொண்டிருந்தனர் என்று அருளியுள்ளார். அதில் ஶங்கரரையும் ஒருவராகக் குறிப்பிட்டுள்ளார். ஆக, ஆதிஶங்கரர் வைஷ்ணவரேயாவார். இக்காலத்தில்

அத்வைதிகள் ஶைவ மதத்திற்கும், சாக்த மதத்திற்கும் மாறிவிட்டபடியால் பொதுஜநங்கள் பலரும் ஆதிஶங்கரர் ஶைவரே என்று மருண்டிருந்தனர். இந்நிலையில் 'ஆதிஶங்கரர் வைஷ்ணவரே' என்ற உண்மையை உலகினர்க்குத் தெளிவாக எடுத்துரைத்தார் ஸுதர்ஶனர். இது வைஷ்ணவவுலகுக்கு அவர் ஆற்றிய ஒப்பற்ற தொண்டாகும்.

இவ்விடத்தில், ஈடு,ஸ்ரீவசநபூஷணம், ஆசார்யஹ்ருதய வ்யாக்யானம் ஆகியவற்றைத் தமிழாக்கம் செய்த திரு.B.R. புருஷோத்தமநாயுடு அவர்களின் கருத்தைக் காட்டுகிறோம். ''சங்கரரும் வைணவமும் வெளிவராவிடில் இவ்வரிய பெரிய நுண்பொருள்கள் வெளிவாராவே? தேவரீர் நூலைப்படிக்கும் போது 'இல்லாதவுலகத்து எங்கும் ஈங்கு இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும் வேதக்கடலுமே என்னும் காட்சி சொல்லாலே தோன்றிற்றன்றே' என்ற ஸ்ரீராமபிரான் கூற்று நினைவிற்கு வருகின்றது. எவற்றையும் பொறுமையோடு ஆய்கின்ற ஆய்வுத்திறனும், அவற்றிற்குத் தக்க விடை இறுத்து அடக்கும் தெறலும் வாழ்க''. இது 10–2–71 ல் நாயுடு அவர்கள் எழுதியதாகும்.

மேலும் ஆதிஶங்கரர் விபூதி (நீறு) பூசாதவர் என்பதை ஸுதர்ஶனர் ஸ்வாமி ஒருமுறை ஸுதர்ஶனத்தில் ஆதாரத்துடன் எழுதியிருந்தார். அதனை அப்படியே கொடுக்கிறோம்.

திருவிசைநல்லூர் சது:ஶாஸ்த்ர வித்வானான ப்ரஹ்மஸ்ரீ ராமஸுப்பா ஶாஸ்த்ரிகள் தமது 'அநுபாஷ்ய காம்பீர்யம்' என்னும் நூலில் ஆதிஶங்கரர் விபூதி பூசாத வைஷ்ணவரே என்று நிரூபித்துள்ளார். அவருடைய வாக்யங்கள் பின்வருமாறு:''பத்$_3$மபாத$_3$ாசார்யை: ப$_4$க$_3$வத்$_3$பாத$_3$ ஶிஷ்யாக்$_3$ரேஸரை: விரசித ப$_4$ாஷ்ய வ்யாக்$_2$யாயாம் பஞ்சபாதி$_3$காயாம் அயம் ப்ராத$_2$மிகமங்க$_3$ளஶ்லோக:

''நமாம்யபே$_4$ாகி$_3$ பரிவார ஸம்பத$_3$ம் நிரஸ்தபூ$_4$திமநுமார்த்த$_4$ விக்$_3$ரஹம்।

அநுக்$_3$ரஹமுந்ம்ருதி$_3$த காகலாஞ்ச$_2$நம் விநா விநாயகமபூர்வஶங்கரம்॥''

இதி ப$_4$க$_3$வத்பாத$_3$ாநாம் அபூர்வஶங்கரத்வத்$_3$யோதக விஶேஷணை: கைலாஸவாஸித்வ விஶிஷ்டஶங்கரஸ்ய ச யாநி பே$_4$ாகி$_3$பரிவாரஸம்பத$_3$ாதி$_3$ ரூபாணி ப$_3$ாஹ்யசிஹ்நாநி, தத்$_3$ராஹித்யம் அபே$_4$ாகி$_3$ பரிவார ஸம்பத$_3$ம் இத்யாதி$_3$ஷட்$_3$பி$_4$: ப்ரதிபாத்$_3$யதே। தத்ர நிரஸ்தபூ$_4$திமிதி த்$_3$விதீயம் விஶேஷணம்। தேந அபி$_4$க்ரமணுதி$_4$கரண ஸித்$_3$த$_4$ ஸந்த$_3$ம்ஶந்யாயேந ப்ரத$_2$ம த்ருதீயாதி$_3$ விஶேஷணவத் பூ$_4$திஶப்$_3$தி$_3$தம் ப$_4$ஸ்மத$_4$ாரணரூபம் யத் கைலாஸவாஸி ஶங்கரஸ்ய ப$_3$ாஹ்யசிஹ்நம் தத$_3$ப$_4$ாவ: கத்$_2$யதே। ப$_4$க$_3$வத்பாதே$_3$ஷு ஆந்தர நிரதிஶயஜ்ஞாந அணிமாத்$_3$யஷ்டைஶ்வர்யஸத்த்வேந ந தந்நிராஸ: நிரஸ்தபூ$_4$திமிதிவிஶேஷணார்த்த$_2$:॥ தஸ்மாத் ஊர்த்$_4$வபுண்ட்$_3$ரமேவ கோ$_3$பீசந்த$_3$நேந ப$_4$க$_3$வத்பாத$_3$ாநாமிதி ஸித்$_3$த$_4$ம்॥

[ஆதிஶங்கரபகவத்பாதருடைய சீடர்களுள் முதன்மையானவர்

பத்மபாதாசார்யர். அவர் பாஷ்ய வ்யாக்யானமான பஞ்சபாதிகை என்னும் நூலை இயற்றினர். அந்நூலில் முதலில் காணும் மங்களஶ்லோகம் இது. இங்கு இந்த ஶ்லோகத்தில் பத்மபாதாசார்யர் தமது குருவான ஆதிஶங்கரருக்கு, ஶங்கரன் என்ற பெயரையுடைய ஶிவபெருமானைக் காட்டிலும் வேற்றுமையைக் ஆறு அடைமொழிகளால் கூறுகிறார்.

'பாம்புக்கூட்டத்தைச் செல்வமாக உடையவராயிராதவரும், விபூதியை (பஸ்மத்தை) விட்டுத் தள்ளியவரும், உமையைப் பாதி உடலாகக் கொள்ளாத வரும், உக்ரத்தன்மை இல்லாதவரும், கழுத்தில் கருமையற்றவரும், விநாயகரோடு தொடர்பு இல்லாதவருமான அபூர்வஶங்கரரை வணங்குகிறேன்' என்பதே ஶ்லோகார்த்தமாகும்.

இந்த ஶ்லோகத்தில் கையிலைமலையிலுள்ள சங்கரருக்கு இருக்கும் வெளிஅடையாளங்கள் ஆதிசங்கரரிடம் இல்லை என்பதை ஆறு அடைமொழி களினால் நிரூபிக்கிறார்.

அந்த அடைமொழிகளுள், 'நிரஸ்தபூதிம்' என்பது இரண்டாவது அடைமொழி. பூர்வமீமாம்ஸையில் 'அபி$_4$க்ரமணுதி$_4$கரணம்' என்று ஓர் அதிகரணம் உள்ளது. அதில் ஸந்த$_3$ம்ஶந்யாயம் என்றொரு ந்யாயம் கூறப்பட்டுள்ளது. அதில் முன்னும் பின்னும் எப்படியிருக்கிறதோ, அப்படியே நடுவிலுள்ளதும் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த ந்யாயத்தைக் கொண்டு பார்க்கும் போது 1,3 அடைமொழிகளைப் போலே இடையிலுள்ள இரண்டாவது அடைமொழியும் விபூதி பூசுதலாகிற சிவபெருமானின் வெளியடையாளமேயாகும். ஆதிசங்கரருக்கு இது (விபூதி பூசுதலாகிற அடையாளம்) இல்லை என்று கூறுவதாகவே கொள்ளவேண்டும். 'பூ$_4$தி' என்னும் சொல் செல்வத்தையும் குறிக்குமாயினும், ஒப்பற்ற ஞானம் முதலான செல்வங்களாகிற ஆத்மகுணங்களைக் கூறுவதாகப் பொருள் கொள்ளமுடியாது. ஏனெனில் ஆதிசங்கரர் ஜ்ஞானநிதியாக இருந்தமையாலே. 'அணிமா' முதலான அஷ்டைஶ்வர்யத்தையும் 'பூ$_4$தி' ஶப்தத்துக்குப் பொருளாகக் கூறமுடியாது. ஆதிசங்கரர் கூடுவிட்டுக்கூடுபாய்தல் முதலான அஷ்டைஶ்வர்யம் உடையவராகையாலே. ஆக, 'நிரஸ்தபூ$_4$திம்' என்னும் அடைமொழி ஆதிசங்கரருக்குச் செல்வமில்லை என்று காட்டாது. ஆகையால் அவர் உடலில் விபூதி பூசாதவர் என்றே தேறும். விபூதி இல்லையென்றால் அவர் நெற்றியில் என்ன குறியுடன் இருந்தார் என்றால் கோபீ சந்தனத்தால் மேல்நோக்கிய ஊர்த்வபுண்ட்ரமே அணிந்திருந்தார் என்று தேறுகிறது.] இவ்வளவும் ராமஸுப்பா ஶாஸ்த்ரிகள் எழுதிய வாக்யங்களாகும்.

ஆதிசங்கரர் விபூதியே தொடாதவர் என்றால் ஏன் அவர் அதனைத் தொடவில்லை? எனில்; பராஶர ஸ்ம்ருதி முதலானவற்றில் பஸ்மத்தை

(விபூதியை) ப்ராஹ்மணக் தொடக்கூடாது என்று கூறப்பட்டுள்ளதால். தற்காலத்தில் உள்ள சங்கராசார்யர்கள் விபூதி அணிந்துள்ளார்கள் எனில், பிறந்தது முதலே விஷ்ணுவினிடத்தில் வெறுப்புக் கொண்டவரான அப்பய்ய தீக்ஷிதர், மற்றும் வித்யாரண்யர் ஆகியோரின் காலத்திலிருந்தே அத்வைதிகள் நீறு பூசத்தொடங்கினர்கள்.

ஆதிசங்கரர் நீறு பூசாதவர் என்று ராமஸுப்பா ஶாஸ்த்ரிகள் நிரூபித்திருந்தாலும் அதனை ஸுதர்ஶனர்ஸ்வாமி எடுத்துக்காட்டவில்லையானல் உலகம் இவ்வுண்மையை அறியாமலேயே போயிருக்கும்.

## வைணவமே பழந்தமிழரின் சமயம்

இன்று நமக்குக் கிடைத்துள்ள தமிழ்நூல்களில் மிகப்பழமையானவை தொல்காப்பியமும், எட்டுத்தொகையும், பத்துப்பாட்டுமேயாகும். இவை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்டவையாகும். இந்நூல்களை ஆராய்ந்து 'திருமாலே தமிழ்க்கடவுள்' என்றும், விஶிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவமதமே பழந்தமிழரின் சமயம் என்றும் ஸுதர்ஶனர்ஸ்வாமி சாதிமதஆராய்ச்சி, சங்ககாலத்தமிழர் சமயம் என்னும் தமது நூல்களில் நிலைநாட்டினர்.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பரிபாடல். (ப்ரஸங்காத் ஒரு விஷயம் – எட்டுத்தொகை நூல்கள் இவைஇவையென்று கூறும் செய்யுளில் ''ஓங்குபரிபாடல்'' என்று பரிபாடலுக்கு ''ஓங்கு'' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டதற்குக் காரணம் ஓங்கி உலகளந்த உத்தமனை திருமாலைப் பாடுவதேயாகும் என்று வர்த்தமான ஸ்ரீமத்பரமஹம்ஸ ஆண்டவன் ஜீயர் ஸ்வாமி ஸுதர்ஶனர்ஸ்வாமியின் ஸப்ததி பூர்த்திவிழாவில் பேசியபோது (1994)ல் கூறியது இப்போது அடியேனுக்கு நினைவுக்கு வருகிறது). திருக்குறளுக்கு உரை இயற்றியவரான பரிமேலழகர்,இந்தப் பரிபாடலுக்கு சுருக்கமாக ஓர் உரை இயற்றியுள்ளார். சாதிமதஆராய்ச்சி (சங்கத்தமிழில் வைணவம்) பாகம்–1 என்ற நூலில் ஸுதர்ஶனர்ஸ்வாமி பரிபாடலுக்கு மிகச்சிறந்த உரை இயற்றியுள்ளார்.

இந்நூலைப்படித்த தமிழ்வித்வான் வி.பூ.வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள் ஸுதர்ஶனரின் உரை பரிமேலழகர் உரையினும் சிறப்பாக அமைந்துள்ளது என்பதை ஓரோர் இடமாக எடுத்துக்காட்டியுள்ளார். ''அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீயாதலின் உறையும் உறைவதும் இலையே; உண்மையும் மறவியில் சிறப்பின் மாயமாரனையை'' என்றவிடத்தில் பொருந்தாத பொருளைப் பரிமேலழகர் உரைத்ததாகவும், புத்தூர்ஸ்வாமி அவ்வடிகளை கீதாஶ்லோகங்களின் தமிழ்மொழி அநுவாதம் என்று கூறிச் சிறப்பாக விளக்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஸுதர்ஶனரின் விளக்கங்களை இன்றிருந்து ஆசிரியர் பரிமேலழகரே காண்பாராயின்,

நடுவுநிலைமிக்க அவர்தம் உள்ளம் இவ்வாசிரியரைப் பாராட்டும் என்று வி.பூ.தமிழ்வித்வான் எழுதியுள்ளார்.

இனி சாதிமதஆராய்ச்சி முதலான நூல்களில் ஸுதர்ஶனர்ஸ்வாமி கூறியுள்ளதை மிகச்சுருக்கமாகக் காட்டுவோம்.

1. இரண்டாம் பரிபாடலில் கீரந்தையார் என்ற சங்ககாலப் புலவர் ''கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய ஊழி ஒருவினை உணர்த்தலின், முதுமைக்கு ஊழி யாவரும் உணரா; ஆழி முதல்வ!'' என்று சுவேதவராஹ உருவோடு பிரளயநீரிலிருந்து பூமியை எடுத்து நிலைநிறுத்திய திருமாலே முழுமுதற்கடவுள் என்று உணர்த்தினர்.

2. ''இருவர் தாதை'' (பரிபாடல்–1) என்றவிடத்தில் திருமாலே பிரமனையும் சிவனையும் படைத்தவனாகக் கூறப்பட்டுள்ளான்.

3. ''நின்னில் தோன்றிய நிரை இதழ்த்தாமரை'' என்று நான்காம் பரிபாடலில் உலகத்துக்குக் காரணமான தாமரை திருமாலிடமிருந்தே தோன்றிற்று என்றார் கடுவன் இளவெயினனார்.

4. முதற்பரிபாடலில் ''பூவனும் நாற்றமும் நீயே'', ''ஐந்து தலை உயரிய அணங்குடை அருந்திறல்மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ'' என்று பிரமனும், சிவனும் அவர்களது படைத்தல், அழித்தல் ஆகிய தொழில்களும் உன்னதீனமே என்று கூறப்பட்டுள்ளது.

5. ''அனைத்தின் உட்பொருளும் நீ'' என்றவிடத்தில் திருமாலே உலகிலுள்ள பொருளனைத்திற்கும் அந்தர்யாமி என்று கூறப்படுகிறது,

6. ''இனைத்து என எண்வரம்பு அறியா யாக்கையை'' என்று எங்குமுள்ள கணக்கற்ற பொருள்களனைத்தும் திருமாலின் சரீரங்களே என மூன்றாம் பரிபாடலில் முழங்கப்பட்டது.

7. ''முதல்முறை இடைமுறை கடைமுறை தொழிலில் பிறவாப்பிறப்பிலை; பிறப்பித்தோர் இலையே'' என்னும் அடிகளில் திருமால் தம் திருவுள்ளப்படி தாமே அவதரித்தாரேயன்றிப் பழவினைப் பயனாக மற்ற மக்களைப்போலப் பிறப்பிக்கப்பட்டாரில்லை என்று உணர்த்தப்பட்டுள்ளது.

8. ''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்'' என்று முல்லை,

குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலங்களுக்கும் உரிய திருமால், முருகன், இந்திரன், வருணன் என்னும் தெய்வங்களைக் கூறவந்த தொல்காப்பியர் தலைமைத் தெய்வமாகையால் மாயோன் என்று திருமாலையே முதலில் எடுத்தார்.

9. ''மாஅயோயே!மாஅயோயே! மறுபிறப்பு அறுக்கும்
மாசுஇல் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே!

என்று மூன்றும் பரிபாடலில் கடுவன் இளவெயினனுர் உயிர்களின் மறுபிறப்பை அறுக்கும் குற்றமற்ற திருவடிகளேயுடைய அப்ராக்ருதத் திருமேனியை உடையவன் திருமாலே என்று கூறியுள்ளார்.

10. ''நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்'' என்று துழாய்மாலே அணிந்த திருமால் கொடுத்தாலல்லது மோக்ஷத்தை அடைய முடியாது என்றும், ''அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம் எளிதின் பெறல் உரிமை'' என்று அரிய உபாயங்களேச் செய்வதன் மூலம் கிடைக்கும் வீட்டுலகம், திருமாலிருஞ்சோலே மலேயில் வாழ்வதாலேயே எளிதில் அடையத்தக்கதாகும் என்றும் பதினேந்தாம் பரிபாடலில் இளம்பெருவழுதியார் என்னும் புலவர் பறைசாற்றினுர்.

11. ''நூலே கரகம் முக்கோல் மணேயே ஆயுங்காலே அந்தணர்க்குரிய'' என்று தொல்காப்பியர் பாடியுள்ளதால் அக்காலத்திலுள்ள ஸந்யாஸிகள் பூணூலும், த்ரிதண்டமும் ஏந்திய ஸ்ரீவைஷ்ணவ ஸந்யாஸிகளே என்று விளங்குகிறது. ஏகதண்டிகளான அத்வைத ஸந்யாஸிகளேப் பற்றிப் பழந்தமிழ் நூல்களில் குறிப்பு எங்குமே கூறப்படவில்லே.

12. கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகையில் ''உறித்தாழ்ந்தகரகமும், உரைசான்ற முக்கோலும்'',''முக்கோல்கொள் அந்தணர் முதுமொழி நினேவார் போல்'' என்னுமிடங்களில் ஸந்யாஸிகள் கரகமும், முக்கோலும் ஏந்தி சிஷ்யர்களோடு யாத்திரை சென்று கொண்டிருப்பார்கள் என்றும், முதுமொழியாகிற வேதத்தையே எப்போதும் நினேந்திருப்பார்கள் என்றும் அவர்கள் இறைவன் திருவடியன்றி வேறு இன்பங்கள் எதையும் கருதாதவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

எண்ணற்ற பாடல்களேக் கொண்டு, சங்ககாலத்தமிழர்கள் விஷ்ணுவையே பரம்பொருளாகக் கொண்டிருந்தனர் என்பதை ஸுதர்ஸனர்ஸ்வாமி தமது நூல்களில் விரிவாக நிலேநாட்டியுள்ளார். அதனேச் சுருக்கிக் காட்டினுேமத்தனே. ஸுதர்ஸனரின் பரிபாடல் உரையை, கல்விக்கடல் தி.வே.கோபாலய்யர் ப்ரமாணவரிசையில் ஒன்ருகக் கொள்ளத்தக்கது என்று கூறியிருக்கிருர்.

இந்நூலேக் கண்ணுற்ற மீமாம்ஸா ஶிரோமணி ஸ்ரீ.உ.வே.நாவல்பாக்கம் தேவநாதாசார்யஸ்வாமி ''பரிபாடல் முதலிய சங்ககாலத்திய தமிழ்நூல்களில் ஸ்ரீமஹாவிஷ்ணுவே பரதெய்வம் என்னும் உண்மை வெகுஅழகாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வைஷ்ணவர் அனேவரும் இவ்விஷயத்தைச் சிறிதும் ஆராய்ந்ததில்லே. இவற்றில் பொதிந்து கிடக்கும் அரிய தத்துவங்களே உட்புகுந்து ஆராய்ந்து, 'சாதிமதஆராய்ச்சி' என்னும் நூலில் வெகுஅழகாக எடுத்துக்காட்டிய தற்காக ஸ்ரீவைஷ்ணவஸமூஹம் ஸ்ரீ.உ.வே.க்ருஷ்ணஸ்வாமி அய்யங்காருக் குப் பெரிதும் கடப்பாடுடையதாகும்'' என்று எழுதியதைக் காட்டி இவ்விஷயத்தை நிறைவுபடுத்துகிறோம்.

## கைவல்யவிஷயத்தில் ஏற்படுத்திய தெளிவு

எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்துக்குப் பாத்ரபூதரான புத்தூர்ஸ்வாமி நம் ஸம்ப்ரதாயத்தில் சித், அசித், ஈஶ்வரன் என்று தத்த்வங்கள் மூன்றானபடியால், அதற்குச் சேர அடையப்படும் புருஷார்த்தங்களும் ஆத்மாநுபவம், ஐஶ்வர்யாநுபவம், பகவதநுபவம் என்று மூன்றாகக்கொள்ளப் படுகிறது. இதில் சித்தாகிற ஆத்மாவின் அநுபவமே கைவல்யமாகும். கைவல்யவிஷயத்தில் தெளிவை ஏற்படுத்தியதை சுருக்கமாகக் காட்டுவோம். தன் ஆத்மாவை மட்டுமே தான் அநுபவித்தலாகிற கைவல்யத்தைப்பற்றி ஸ்ரீவைஷ்ணவர்களிடையே இரண்டு அபிப்ராயங்கள் இருந்து வந்தன.

*1.* கைவல்யம் ப்ரக்ருதி மண்டலத்தில் அநுபவிக்கப்படும் சிறந்த ஐஶ்வர்யமேயன்றி மோக்ஷமன்று. கைவல்யநிஷ்டன் சிலகாலம் தன் ஆத்மாவை அனுபவித்துவிட்டு, பின்னர் பரமபதத்தை அடைவான்.

*2.* கைவல்யம் நித்யமுக்தியே. பஞ்சாக்நிவித்யாநிஷ்டனே கைவல்ய நிஷ்டன். ஜ்ஞானவிரிவுபெற்ற அவனுக்கு ப்ரஹ்மம் ப்ரகாஶிப்பதையிட்டே அவனுக்கு ப்ரஹ்மப்ராப்தி சொல்லப்படுகிறது. அவனுக்கு அர்ச்சிராதி மார்க்கம் உண்டு. ப்ரஹ்மாநுபவம் கிடையாது.

ச$_2$ாந்தோ$_3$க்$_3$யோபநிஷத்தில் ஏழாவது ப்ரபாட$_2$கத்தில் ‘ப்ராணன்’ எனப்படும் தன் ஆத்மாவை உபாஸிப்பவனே கைவல்யநிஷ்டன் என்று நிலைநாட்டினார் புத்தூர்ஸ்வாமி. அவனுக்கு அர்ச்சிராதி கதி கிடையாது. கைவல்யம் நித்யமான மோக்ஷமே. விரஜைக்கு அப்பால் உள்ள ஸ்தானமே அது. என்றுமே பகவதநுபவம் இல்லாமல் போவதால் ஆத்மவிநாசத்தை ஒத்த அது அடியோடு விலக்கத்தக்கது. இதனை திவ்யப்ரபந்த ரஹஸ்ய வ்யாக்யானங் களைக் கொண்டும், பாலஸரஸ்வதி ஆசார்யரின் தாத்பர்ய தீபிகையைக் கொண்டும் ஸுதர்ஶனர் ஸ்வாமி உறுதிப்படுத்தினார். வேளுக்குடி வாகம்ருதவர்ஷீ ஸ்ரீ.உ.வே.வரதாசார்ய ஸ்வாமி கைவல்யஸித்தாஞ்ஜனத்தில் புத்தூர்ஸ்வாமி காட்டியுள்ள பக்ஷமே ஸித்தாந்தம் என்பதற்கு அத்தாட்சிப் பத்திரம் கொடுப்பது போல் கீழ்க்காணும் ஐந்து ஶ்லோகங்களை அருளிச்செய்துள்ளார்.

जयति रघुपते: वाक्यमेतद्धि सत्यम्

१. विभीषणप्रपत्तौ हि पक्षत्रयमुदीरितम् । सुग्रीवहनुमत्पक्षौ रामपक्षस्तथैव च ।।

२. सुग्रीवादिवच: श्रुत्वा हनूमान् उत्तरं जगौ । तद्वचस्त्वधरीकृत्य राम उत्तरमब्रवीत् ।।

३. तथा कैवल्यविषये त्वन्त: सौदर्शनोध्रुव: ।
इति हृष्टा: गरीयांस: भवेयुरिति मे मति: ।।
(अन्त: सिद्धान्त:इत्यर्थ: । सौदर्शन: - सुदर्शनस्थित: इत्यर्थ: ।।

४. कैवल्यतत्त्वमधिकृत्य वदन्ति सर्वे

विद्वत्तमा ननु ततोऽप्यधिकश्च पक्षः ।

लब्धः सतां द्रविडसंस्कृतशास्त्रदृष्टः

मध्यस्थमत्सरिजना इह मा च भूवन् ।।

५. सुदर्शनस्थ कैवल्यसिद्धाञ्जनमुपेयुषा । वरदार्येण दासेन स्वाभिप्रायो निवेदितः ।।

இவ்வைந்து ஶ்லோகங்களின் பொருள் சுருக்கமாகக் கூறப்படுகிறது. **(சக்ரவர்த்தித்திருமகனின் உண்மையான வாக்கேவெற்றிபெறும்.** விபீஷணன் இராமபிரானைக்குறித்து ஶரணாகதி செய்தபோது 1.ஸுக்ரீவன் முதலானோர் விபீஷணன் தீயவனாகையால் ஏற்கத்தகாதவன் என்றனர். 2. விபீஷணன் நல்லவனாகையால் ஏற்கத்ததககவனே என்றான்அநுமன்.3.பெருமாள் அவ்விரண்டு பக்ஷங்களையும் தள்ளி 'விபீஷணன் துஷ்டனாயினும் கைக்கொள்ளத்தக்கவனே' என்று அருளினார்.

அதுபோல் கைவல்ய விஷயத்திலும் இதற்கு முன்பு பண்டிதர்களால் இரண்டு பக்ஷங்கள் கூறப்பட்டு வந்தன. அவ்விருபக்ஷங்களைக் காட்டிலும் வேறுபட்டதாய், வடமொழி, தென்மொழி மறைகளில் கூறப்படுவதாய், திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்களின் பக்ஷம் கிடைத்துள்ளது. ஸுதர்ஶனத்தில் வெளிவந்த இந்த நிர்ணயம் அசைக்கவொண்ணாதது. இப்பக்ஷத்தில் எவரும் ஸரியோ தவறோ என்று தயங்குபவர்களாகவோ, மாத்ஸர்யம் கொண்டவர் களாகவோ ஆகாமல் இருப்பார்களாக. இவ்வண்ணம் வரதாசார்யரால் தம் கருத்து தெரிவிக்கப்பட்டது.)

கைவல்யஸித்தாஞ்ஜநத்தில் ஸுதர்ஶனர்ஸ்வாமியின் நிர்ணயமே ஸரியென்று பலபலவித்வான்களும் இசைந்துள்ளனர். இப்படி, கற்றவர் தெற்றிவரும்படியான பெருமைபடைத்தவர் நம்ஸ்வாமி.

ஸுதர்ஶனர்ஸ்வாமி அடியேனுக்கு காலக்ஷேபம் ஸாதித்தகாலத்தில் அடிக்கடி ஒரு பாடலைக்கூறுவார்.

''தண்டாமரையின் உடன்பிறந்தும் தண்டேன் நுகரா மண்டூகம்
வண்டே கானத்திடைப்பிறந்தும் வந்தே கமலமதுவுண்ணும்...''

இவ்வடிகளுக்கு ஸ்வாமி கூறியபொருளைக்கூறுகிறோம். ஒரு குளத்திலே தாமரையோடு கூடவே பிறந்த மண்டூகம் (தவளை), தாமரையின் தேனைப்பருகு வதில்லை. எங்கோ காட்டிலிருந்து வந்த வண்டானது தாமரையின் மதுவைப் பருகும். அதுபோல் என்னுடன் பிறந்த பந்துக்களில் பலரும், என்னிடமிருந்து ஸம்ப்ரதாயார்த்தங்களைப் பெறாமல் போனார்கள். நீயே அவ்வர்த்தங்களைப் பெற்றாய்' என்பர். புத்தூர்ஸ்வாமியின் முகாரவிந்தத்திலிருந்து பெருகிய தேனைப் பாநம் பண்ணிய ப்₄ரமரமாகையாலே போக்குவீடாக ஏதோ சிலவற்றைப் பிதற்றினோமத்தனை. குற்றம்குறைகளிருப்பின் பெரியோர்கள் திருத்திப்பணி

கொள்ளும்படி ப்ரார்த்திக்கிறேன்.

**மங்க$_3$ளாஶாஸந ப$_3$லம்**

ஸ்ரீராமாயணத்தில் 'ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணு' (கறுத்த கண்களையுடைய ஸீதையைப் பிரிந்து ஒரு நொடியும் உயிர் வாழமாட்டேன்) என்று கூறிய பெருமாள் பத்துமாதம் பிராட்டியைப்பிரிந்து தரித்திருந்ததற்கு, பெரியஉடையார் 'ஆயுஷ்மந்' என்று பெருமாளை மங்களாஶாஸநம் செய்ததே காரணம் என்பர் பெரியோர். அதுபோல் ஸுதர்ஶனர்ஸ்வாமி நம்மிடையே எழுந்தருளியிருப்பதற்கும் பல மஹநீயர்களின் மங்களாஶாஸநமே காரணமாகும். உதாரணமாக மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே.காரப்பங்காடுஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஶனம் 68ல் ஸுதர்ஶனர் ஸ்வாமியை வாழ்த்தியுள்ளார். ஸ்தாபகர் ஸ்வாமி– நம்ஸ்வாமிக்கு 77வருடம் என்று ஆயுஸ்ஸை குறித்திருந்தாலும், இன்றும் நம்ஸ்வாமி எழுந்தருளியிருப் பதற்கு இதுபோன்ற பெரியோர்களின் மங்களாஶாஸநமே முக்யகாரணமாகும். இதற்கு மற்றும் சிலகாரணங்கள் உண்டு. எம்பெருமான் தானும், தன் செல்வமும் வாழும்படி இவரைக்கொண்டு எழுதுவிக்கத்தொடங்கிய பெரியதிருமொழி விவரணம், பகவத்விஷயவிவரணம் முதலானவை நிறைவேறுவதற்காகவும், ''ஜ்ஞாநாநி அல்பீப$_4$விஷ்யந்தி பீ$_4$ஷ்மே லோகாந்தரே க$_3$தே'' என்கிறபடியே ஜ்ஞாந பாஸ்கரரான பீஷ்மாசார்யர் போய்விட்டால் உலகில் ஞானமே க்ஷீணித்துவிடும்; அவரைப்போலே தர்மத்தை நிர்ணயித்துச்சொல்வாரில்லை என்றுப்போலே ஜ்ஞாநபாஸ்கரரான ஸுதர்ஶனர்ஸ்வாமியை தன்னிடம் சேர்த்துக்கொண்டால் இவ்வுலகில் ஞாநமும் குறைந்து, நல்வார்த்தை சொல்வாரும் குறைந்துவிடுவர் என்பதற்காகவும், வேர் சூடுமவர்கள் அதன் வாசனையிலுள்ள மண்பற்றுக் கழற்றுதாப்போலே இவருடைய ஞானம், பக்தி எல்லாம் தோற்றும்படியிருக்கிற திருமேனியில் தனக்குண்டான விருப்பத்தாலும், ஸுதர்ஶனர் ஸ்வாமியை இன்னமும் நெடுநாள் இங்கே இருக்கவேண்டுமென்று ஸங்கல்பித்துள்ளான். நம்ஸுதர்ஶனர்ஸ்வாமி இன்னமும் பலகாலம் அரோகத்ருடகாத்ரராய் எழுந்தருளியிருந்து இவ்வுலகை வாழவைக்கவேண்டு மென்று, அடியார்களனைவரும் எம்பெருமானிடம் விண்ணப்பித்துக்கொள்ளும் படி வேண்டிக்கொள்கிறோம்.

ஸ்ரீ:

# பரகாலகவியின் பத்தாம்பத்து அநுபவம்

(அம்மாள் ஸ்ரீ.உ.வே.ஸௌம்யநாராயணாசார்யஸ்வாமி,
மேலத்திருமாளிகை, திருவெள்ளறை)

ஆழ்வார்களின் தோற்றத்தடைவிலே கடைசியாகத் திருவவதாரம் பண்ணினவர் திருமங்கையாழ்வார். ''பொய்கையார்'' என்று தொடங்கி ஆழ்வார்களின் அடைவை உபதேஶித்தருளும் மாமுனிகள் திருமங்கையாழ் வாரை 'நற்கலியன்' என்று போற்றினர். 'அடியவர்கள் தம்மடியான்' என்று தாமே சொல்லும்படி, மற்றையாழ்வார்கள் திருவடிகளில் ஶேஷத்வமே தமக்கு நிரூபகமாம்படி எண்ணியிருக்கிற நன்மையை உடையவராகையாலே இவரை 'நற்கலியன்' என்று போற்றினர் மாமுனிகள். வாய்த்த திருமந்திரத்தை வாளைக்காட்டி அச்சுறுத்தி எம்பெருமானிடமிருந்து பெற்றமையால் இவர் 'வாய்த்தபுகழ் மங்கையர்கோன்' என்று கொண்டாடப்பட்டார். எம்பெருமானுக் குத் திருமதிள்போலே அரணாயிருப்பதான ஆறு திவ்யப்ரபந்தங்களை அருளிச் செய்தார் திருமங்கையாழ்வார்.

பரகாலரான திருமங்கையாழ்வாரின் பனுவல்கள்—நம்மிடமுள்ள அறிவின்மையாகிற இருளைப்போக்கும் விளக்கு; தொடர்ந்து வருகிற ஜந்மமாகிற நஞ்சுக்கு நல்ல அமுதம்; எழுத்து, சொல், பொருள்,யாப்பு, அணி என்கிற ஐந்து இலக்கணங்களோடு கூடிய த்ராவிட ஶாஸ்த்ரத்துக்கு இலக்கியம்; ஸகலவேத ஸாரம். பகவத்பாகவத விரோதிகளை ஆழ்வார் தம் திருக்கையாலே வாளைக் கொண்டு நிரஸித்தார். தம் அருளிச்செயல் மூலம் இதரமதக்கொள்கைகளை நிரஸிக்கிறார். ஆழ்வார் தாம் செய்யும் விரோதிநிரஸந கார்யத்துக்கு அவரது கையும், வாயும் ஒத்திருக்கிறபடி. பரகாலகவியின் பனுவல் கேட்டு தான் பெரியபெருமாள் தினமும் பள்ளிகொள்கிறார் என்றால், அப்பனுவல்களுக்கு எவ்வளவு ஏற்றம்!

பரகாலரின் பனுவல்கள் அனைத்தும் பெருமை பொருந்தியவையானாலும், பெரியதிருமொழி பத்தாம்பத்து தனிச்சிறப்பு வாய்ந்தது. பத்தாம்பத்தில் அனைத்துப் பதிகங்களுமே பரமவிலக்ஷணமானவை. 'ஒருநல்சுற்றம்' பதிகத்துக்கு நிகரான ஒரு பதிகத்தைச் சொல்லமுடியுமோ? ஒவ்வொரு பாசுரத்திலும் இரண்டிரண்டு திவ்யதேஶங்களை அநுபவிக்கிறார் ஆழ்வார். பிறந்தகத்தில் நின்றும் புக்ககம் புறப்படுகின்ற பெண்பிள்ளை தன் உறவுமுறை யார் உள்ளவிடமெங்கும் புக்கு 'நான்போய்வருகிறேன்' என்று சொல்லி வருவதுண்டு. அதுபோலே திருமங்கையாழ்வாரும் தம் புக்ககமாகிய பரமபதத்தின் பயணத்திற்கு ஸித்தமாய் விட்டபடியால், தாம் மிகவும் ஈடுபாடு

கொண்டுள்ள சில திவ்யதேஶங்களில் சொல்லிக்கொள்ளப் புறப்படுகிறுர் 'ஒருநல்சுற்றம்' என்ற திருமொழியில். மாதாபிதாக்களோ, உடன்பிறந்தவர்களோ, மற்றுமுள்ள பந்துக்களோ உண்மையான உறவினரில்லை; எம்பெருமான் ஒருவனே ஒப்பற்ற விலக்ஷண பந்து என்பதை 'ஒருநல்சுற்றம்' என்னும் தொடர் மூலம் உணர்த்துகிறுர்.

நாலாயிர திவ்யப்ரபந்த அடைவில் பதிகம் முழுவதற்கும் ஒவ்வொரு பாட்டுக்கும் விஷயமான முதல் திவ்யதேஶம் திருவெள்ளறை; கடைசி திவ்யதேஶம் திருப்பேர்நகர் (அப்பக்குடத்தான் ஸந்நிதி). கடைக்குட்டியான திருமங்கையாழ்வார் இந்த இரண்டு திவ்யதேஶத்தையும் 'துளக்கமில் சுடரை' (10–1–4) என்ற பாசுரத்தில் ஒருசேர அனுபவிக்கும் அழகை நோக்கவேணும். திருப்பேர் நகரை இந்தப் பாசுரத்தில் அனுபவித்துவிட்டு, இறுதியான பத்தாவது பாசுரத்திலும் மீண்டும் அனுபவிக்கிறுர். திருப்பேர்நகரில் ஸேவைஸாதிக்கும் எம்பெருமான் விஷயமாக இப்பத்துப் பாசுரம் அருளியதுபோல் உள்ளது. நம்மாழ்வார் பரமபதம் செல்ல ஸித்தமானவுடன் திருவாய்மொழியில் திருப்பேர்நகர் எம்பெருமானையே கடைசியாக அனுபவித்தார். திருமங்கையாழ்வாரும் 'ஒருநல்சுற்றம்' பதிகத்தில், பரமபதம் செல்லத் தாம் ஸித்தமாய்விட்டதாகத் திருவுள்ளம் பற்றுகிறபடியால் நம்மாழ்வாரைப்போல் திருப்பேர்நகரில் ஈடுபடுகிறுர் போலும்!

பத்தாம்பத்து 2,3 திருமொழிகளில் ராமவிஜயத்தை எதிரிகள் பாசுரத்தாலே அனுபவிக்கிறுர். பெருமாளுடைய வெற்றிச் செல்வத்தை வாயாரப்பேசி மகிழவேணும் என்று ஆழ்வாருக்கு ஆசை. தோற்றுப்போன ராக்ஷஸர்களின் நிலையிலே நின்று ஶ்ரீராமவிஜயத்தைப்பேசி அனுபவிப்பதென்பது இவ்விரண்டு திருமொழிகளின் தனிச்சிறப்பு. 'தடம்பொங்கத்தம்பொங்கோ', 'குழமணிதூரம்' என்ற இவ்விரு பத ப்ரயோகங்களும் திருமங்கையாழ்வாருக்கே அஸாதாரணம்.

த்வேஷத்தின் எல்லையிலே நின்ற அரக்கர்களின் நிலையிலே நின்று ராமவிஜயத்தை அனுபவித்த ஆழ்வார், இப்போது ப்ரேமத்தின் எல்லையிலே நின்ற யஶோதைப்பிராட்டி பாசுரத்தாலே க்ருஷ்ணவதாரத்தை அனுபவிக்கிறுர் நாலாம் திருமொழியில். செங்கண் நெடியவனை புண்டரீகாக்ஷனை, பெரியாழ்வாரைப்போல் யஶோதா பாவனையில் அம்மம் உண் என்று அழைப்பது இத்திருமொழிக்கு உண்டான தனிச்சிறப்பு. 'சந்தமலர்' (10–4) பதிகத்தில் 'செங்கண்நெடியதிருவே', 'அந்தியம்போது அங்குநில்லேல்' (மன்றில் நில்லேல் அந்திப்போது–காப்பிடல்) ஆகிய பதங்களை நோக்கினுல், பெரியாழ்வார் திருவெள்ளறை புண்டரீகாக்ஷனிடம் மிகவும் ஈடுபட்டுக் காப்பிட்ட காப்பிடல் பதிகத்தைத் திருமங்கையாழ்வார் இங்கு நினைக்கிறுரோ என்று தோன்றுகிறது.

க்ருஷ்ணவதாரத்தில் பெரியாழ்வார் யஶோதா பாவனையில் முலையுண்

பருவம், சப்பாணிப்பருவம் என்று அநுபவித்தாப்போல், திருமங்கையாழ் வாரும் பெரியதிருமொழியின் கடைசியில் (4,5 திருமொழிகளில்) அனுபவிப்பது ஒப்பற்றது. சென்ற திருமொழிபோல், 5வது திருமொழியிலும் 'செந்தாமரைக் கண்ணு' என்று ஆர்வத்தோடு அழைத்து, புண்டரீகாக்ஷனைக் கைகொட்டி விளையாட அழைக்கிறுர் ஆழ்வார்.

எம்பெருமானுடைய மேன்மைக் குணத்தையும், எளிமைக்குணத்தையும் 'எங்கானுமீதொப்பதோர் மாயமுண்டே' என்று தொடங்கி அத்யாஸ்சர்யமாக அனுபவிக்கிறுர் ஆழ்வார். அன்று மேன்மையின் எல்லேயிலே நின்ற எம்பெருமான் காண்மின், வயிற்றை நிறைப்பதற்காக ஆய்ச்சியர் உறிகளிலே சேமித்து வைத்த பால், தயிர், நெய், வெண்ணெய் ஆகியவற்றை விழுங்கி இன்று உரலோடு ஆப்புண்டிருக்கிறுனென்று ஒவ்வொரு பாசுரத்திலும் அனுபவிக்குமழகை என்னென்று உரைக்கவல்லோம்? இதுபோல் ஆஸ்சர்ய மாகப் பாசுரமிடுவதைத் திருமங்கையாழ்வார் திறத்தல்லது எங்கும் கண்டதில்லே என்னும்படியாக இப்பதிகம் அத்யத்புதமாக அமைந்துள்ளது.

வெண்ணெய் களவு காணும் பருவத்தை அனுபவித்தார் (10–6) திருமொழியில். வெண்ணெயையும், பெண்களேயும் ஒக்கக்களவு காணும் பருவத்தை அனுபவிக்கிறுர் (10–7) திருமொழியில். 'மானமுடைத்து' என்கிற இத்திருமொழி 14 பாசுரங்கள் கொண்டது. மிகுதியான பாசுரங்களேப் பெற்ற இப்பதிகத்தில் க்ருஷ்ணுவதாரசேஷ்டிதம் தவிர வேறுரவதாரத்தின் வைபவம் லவலேஶமும் இல்லே என்பது இப்பதிகத்தின் தனிச்சிறப்பு.

'காதிற்கடிப்பிட்டு' என்னும் எட்டாவது திருமொழியில், ப்ரணயரோஷம் தலேயெடுக்கப்பெற்ற ஓர் ஆய்ச்சி பாவனேயில் பேசுகிறுர் ஆழ்வார். நெடும்போதேபிடித்துக் கண்ணனே எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஓர் ஆய்ச்சி காலம் கடந்து வந்த கண்ணபிரானே நோக்கி ''தக்கார் பலர் தேவிமார் சாலவுடைய பெரியவரே! இங்கே ஏதுக்கு எழுந்தருளிற்று? பதினுறுமாயிரவர் தேவிமார் பணிசெய்ய வீற்றிருக்கும் மணவாளராயிற்றே தேவரீர். இப்போது நாங்கள் உமக்கு ஒரு சரக்கல்லவே. அங்கேயே எழுந்தருளலாம்'' என்று காலம் தப்பிவருகையாலே கடும் வார்த்தை சொல்லி ஏசினுள். காதில் குண்டலமிட்டுக் கொண்டும், அரையில் திருப்பரியட்டத்தைச் சாத்திக்கொண்டும், அழகிய திருத்துழாய்மாலே அணிந்து கொண்டும் வரவேண்டுகையாலே சிறிது தாமதமாயிற்று என்றுன் கண்ணன். ''வெறும் காதே பரமபோக்யமாயிற்றே, குண்டலம் வேணுமோ? புழுதியளேந்த பொன்மேனியை நாங்கள் உகக்க விருக்க, வஸ்த்ரம் உடுத்துத் திருமேனியழகை மறைக்கவேணுமோ? 'ஸர்வகந்த:' என்கிறபடியே திருமேனியே பரிமளத்தோடு கூடியிருக்க, திருத்துழாய்ப்பரிமளத்தை ஏறிடவேணுமோ? இருந்தபடியே உகக்கிற

எங்களுக்கு இந்த ஒப்பனைகள் தேவையோ? ஏதுக்கு இதுவென் இதுவென் இதுவென்னோ?'' என்று கண்ணனுக்கு முகம் கொடாமல் ஓர் ஆய்ச்சி ப்ரணயரோஷத்துடன் பேசின ஊடல் திறத்தை வெளியிடும் இப்பதிகம் ஓர் ஆஶ்சர்யமான பதிகம்.

'புள்ளுருவாகி' என்ற ஒன்பதாம் திருமொழி பழமொழியால் பணிந்துரைத்த பாட்டுக்களைக் கொண்டது. ஒவ்வொரு பாட்டிலும் காணப்படும் பழமொழி சுவைத்து இன்புறத்தக்கது.

பரகாலநாயகி தன் ஆற்றாமையாலே 'எம்பெருமானோடே என்னைச் சேர்க்க வேணும்' என்று கண்ணால் கண்ட பக்ஷிகளின் காலிலே விழுகிறாள் பத்தாம்பத்து கடைசித் திருமொழியில். ''திருத்தாய் செம்போத்தே, கரையாய் காக்கைப் பிள்ளாய், கொட்டாய் பல்லிக்குட்டி, சொல்லாய் பைங்கிளியே'' என்றெல்லாம் பரகாலநாயகி வேண்டுவதால் சகுனஶாஸ்த்ரம், பல்லி சொல்லுக்குப் பலன் முதலானவற்றிலும் ஆழ்வார் வல்லவர் என அறிகிறோம். திருவாய்மொழியில் 'வீடுமின் முற்றவும்', 'கண்ணன் கழலிணை' ஆகிய பதிகங்கள் போல் பெரியதிருமொழியில் இப்பதிகம் அளவில் மிகச்சிறியது. பெருமை அதிகம் வாய்ந்தது. பாசுரம்தோறும் முதலடியும், ஈற்றடியும் ஒன்றேயாயிருப்பது ஓர் தனிச்சிறப்பு.

பெரியதிருமொழியில் பத்தாம்பத்து அனுபவம் என்பது ஓர் ஒப்புயர்வற்ற அனுபவமாகும். ஏதோ மேலெழுந்தவாரியாக இங்கு அனுபவித்தோம். கலியனது ஒலிமாலை செஞ்சொலால் எடுத்த தெய்வநன்மாலை என்பது உண்மையே. 'செம்மைப் பனுவல் நூல்' *(10–4–10)* என்று திருமங்கையாழ்வார் தாமே கொண்டாடும்படியான மிகச்சிறந்த ஶாஸ்த்ரம் அவரது அருளிச்செயலாகும். கோவைத் தமிழால் கலியன் சொன்ன சொல் வல்லார்க்கு அல்லலில்லை. நம் கொடுவினைகள் முழுதகலும் என்பது திண்ணம். உலகில் எண்ணிலாத பேரின்பம் பெறுவது உறுதி.

''யத்$_3$க்$_3$ருஹே வர்த்ததே நித்யம் பரகாலோ மஹாயஶா:।
கலிதோ$_3$ஷா: பலாயந்தே ஸிம்ஹம் த்$_3$ருஷ்ட்வா யதா$_2$ ம்ருகா$_3$:॥''

(எந்தக்ருஹத்தில் மிகவும் கீர்த்திபெற்றவரான திருமங்கையாழ்வார் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கிறாரோ, அந்த இல்லத்திலிருந்து சிங்கத்தைக் கண்ட மான்கள் போலே கலிதோஷங்கள் ஓடுகின்றன.) இது ப்ரபந்நாம்ருதத்தில் காணும் திருமங்கையாழ்வார் வைபவம் பற்றிய ஶ்லோகம். இப்படி வைபவம் படைத்த திருமங்கையாழ்வார் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடி மகிழ்வோம்.

सुधानिधिमिव स्वैरस्वीकृतोदग्रविग्रहम्।
प्रसन्नार्कप्रतीकाशप्रकाशपरिवेष्टितम्।। ३

ஸுத$_4$ாநிதி$_4$மிவ ஸ்வைரஸ்வீக்ருதோத$_3$க்$_3$ர விக்$_3$ரஹம் ।
ப்ரஸந்நார்க்க ப்ரதீகாஶ ப்ரகாஶ பரிவேஷ்டிதம் ।। 3

**பதவுரை:– ஸ்வைர ஸ்வீக்ருத உத$_3$க்$_3$ர விக்$_3$ரஹம்** – தமது இஷ்டப்படி தாமே ஏற்றுக்கொண்ட மிக அழகிய திருமேனியை உடையவராய், **ஸுத$_4$ாநிதி$_4$ மிவ** (ஸ்தி$_2$தம்) – திருப்பாற்கடல் போல் வெண்மை நிறமுடையவராய் இருப்பவரும், **ப்ரஸந்ந அர்க்க ப்ரதீகாஶ ப்ரகாஶ பரிவேஷ்டிதம்** – (கண்கூசாமல் காணும்படியாகத்) தெளிந்தும் குளிர்ந்துமிருக்கும் ஸூர்யன் (ஒருவன் இருப்பானுகில் அவன்) போன்ற காந்தியினுல் சூழப்பட்டவருமாகிய....

**கருத்துரை:–** 'ஆசார்யருடைய திருமேனியை, திருவடி முதலாகத் திருமுடியீருக, ஶிஷ்யன் த்$_3$யானிக்கவேண்டும்' என்றும், 'ஶிஷ்யன் ஆசார்யன் திருமேனியை ஸேவிப்பதில் பற்றுடையவனுக இருக்கவேண்டும்' என்றுமுள்ள வசனத்தின்படி ஆசார்யன் திருமேனியை வருணிக்கிருர் எறும்பியப்பா. மாமுனிகள் வெள்ளைவெளேரென்ற திருமேனியையுடைய திருவநந்தாழ்வானுடைய அவதாரமாகையாலே தம்மிஷ்டப்படி தாமே ஏற்றுக்கொண்ட திருப்பாற்கடல் போல வெண்மைமிக்க அழகிய திருமேனியையுடையவர் எனப்பட்டார். திருப்பாற்கடலுக்குக் காந்தி அதிகமாக இல்லாமையால், மேலும் காந்தியையுடைய ஸூர்யனை மாமுனிகளுக்கு உபமானமாக்கினுர். ஸூர்யனுடைய காந்தி உக்ரமாகவும் உஷ்ணமாகவும் உள்ளதனுல் அதனை நீக்க, ஸூர்யனுக்கு 'ப்ரஸந்ந' என்ற விஶேஷணமிட்டார். 'தெளிந்தும், குளிர்ந்துமிருக்கிற' என்பது அதன் பொருள். அப்படி ஒரு ஸூர்யன் உண்டானுல் அவனுடைய ஒளிபோன்ற ஒளியால் சூழப்பட்டவர் மாமுனிகள் என்று அபூதோபமையாக (இல்பொருளுவமையாக) ஸூர்யனைக் கூறியபடியாம் இது. (3)

पार्श्वत: पाणिपद्माभ्यां परिगृह्य भवत्प्रियौ।
विन्यस्यन्तं शनैरङ्घ्री मृदुलौ मेदिनीतले।। ४

பார்ஶ்வத: பாணிபத்$_3$மாப்$_4$யாம் பரிக்$_3$ருஹ்ய ப$_4$வத்ப்ரியௌ ।
விந்யஸ்யந்தம் ஶநைரங்க்$_4$ரீ ம்ருது$_3$லௌ மேதி$_3$நீதலே ।। 4

**பதவுரை:– பார்ஶ்வத:** – இரண்டு பக்கங்களிலும், **ப$_4$வத்** – தேவரீருக்கு, **ப்ரியௌ** – ப்ரீதி பாத்ரர்க ளான கோயிலண்ணனையும் அவர் திருத்தம்பியாரையும், **பாணிபத்$_3$மாப்$_4$யாம்** – தாமரைமலர் போன்ற திருக்கைகளால், **பரிக்$_3$ருஹ்ய** – நன்ருகப்பிடித்துக்கொண்டு, **ம்ருது$_3$லௌ** – ம்ருதுவான, **அங்க்$_4$ரீ** – திருவடிகளை, **மேதி$_3$நீதலே** – பூதலத்தில், **ஶநை:** – மெல்ல, மெல்ல, **விந்யஸ்யந்தம்** – வைத்து நடப்பவராகிய...

**கருத்துரை:–** தமதருகில் மாமுனிகள் வருகிறபடியைச் சிறப்பிக்கிருர் இதனுல். ஆசார்யனே ஶேஷி என்ற ஜ்ஞாநமும், அவரே உபாயமென்ற உறுதிப்பாடும், அவ்வுபாயத்தினுல் பெற்ற ஆசார்ய கைங்கர்யமும், இம்மூன்றுக்கும் தகுதியான அநுஷ்டாநமும் உள்ளமையினுல் மணவாளமாமுனி களுக்குக் கோயிலண்ணனுன வரதநாராயணகுருவும், அவர் தம்பியாரான ஸ்ரீநிவாஸகுருவும்

அன்புக்கிலக்காயினர் என்றபடி. தூய்மையாலும், அழகாலும் மாமுனிகளின் திருக்கண்கள் தாமரை மலர் போன்றனவாயின. (பரிக்$_3$ருஹ்ய) நன்ருகப் பிடித்துக்கொள்ளுதலாவது – மனத்தில் அன்போடு கூடிக் கைகளினுல் பிடித்துக்கொள்ளுதலேயாகும். அதாவது – தாம் பெரியவரென்றும் ஶிஷ்யர்கள் சிறியவர்களென்றும் நினேயாமல் ஸௌஶீல்யாதிஶயத்தோடு பிடித்துக்கொள்ளுதல்.

இரண்டு திருக்கைகளாலும் ஶிஷ்யர்களேப் பிடித்துக்கொண்டால் த்ரிதண்டத்தை த$_4$ரிக்க முடியாதல்லவா? எப்போதும் ஸந்யாஸிகள் த்ரிதண்டத்தை த$_4$ரிக்கவேண்டுமே. ஶ்ரீபாஞ்சராத்ர – தத்த்வஸார ஸம்ஹிதையில் 'த்ரிதண்டமென்னும் பெயர்பெற்ற விஷ்ணுவினுருவத்தை யதியானவர் எப்போதும் த$_4$ரிக்கக்கடவர்' என்றும், விஷ்ணு ஸ்ம்ருதியில் 'யஜ்ஞோபவீதம், த்ரிதண்டம், கமண்டலு ஜலபவித்ரம் கௌபீநம் அரைநாண் என்னுமிவற்றை யதியானவர் ஆயுளுள்ளவரையில் விடாமல் த$_4$ரிக்கக்கடவர்' என்றும் கூறப்பட்டுள்ளதல்லவா? என்று இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. இதற்கு விடை வருமாறு. ஜ்ஞாநபூர்த்தியையுடைய ஸந்யாஸி விஷயத்திலே – ஒரு காரணவிஶேஷணத்தினுல் ஏதோவொரு ஸமயத்தில் த்ரிதண்டமில்லாமலிருப்பினும் தோ$_3$ஷமில்லே. 'த்$_4$யாநம், நன்னடத்தை கேள்வியறிவு இயற்கையறிவு யதித$_4$ர்மமாகிற வைராக்$_3$யம் உலகையடக்குமாற்றல் ஆகிய இவை எந்த ஸந்யாஸியினிடத்தில் உள்ளனவோ அவனுக்கு த்ரிதண்டம் முதலிய மாத்ரைகளினுல் பரிகரங்களினுல் ஆகவேண்டிய பயனேதுமில்லே' என்று க்ரதுவின் வசநம் இங்குக்காணத்தக்கது. மேலும் கோயிலுக்குச் செல்லுவது எம்பெருமானே ஸாஷ்டாங்க$_3$மாகத் தடிபோல் கீழே படுத்து வணங்குவதற்காகவேயாகையால், தடிபோல் உடலேத் தரையிலே படுக்கவைத்து இரண்டு கைகளேயும் இரண்டு கால்களேயும் நீட்டி, நீட்டிய இரண்டு கைகளேயும் கூப்பிச்செய்யும் நமஸ்காரமே தண்டவத் ப்ரணமமாகையால், இப்படிப்பட்ட ப்ரணமத்தை, த்ரிதண்டத்தைக் கையிலேந்திக் கொண்டு செய்யமுடியாதாகையால், கோயிலுக்குச்செல்லும்போது த்ரிதண்டம் த$_4$ரியாவிட்டால் குற்றமேதுமில்லே. இரண்டு கைகளின் நடுவே ஒருபொருளேயும் வைத்துக்கொள்ளாமல் கைகளேக் கூப்பிக்கொண்டு தண்டனிடும்போது த்ரிதண்டத்தைத் த$_4$ரிக்கமுடியாதல்லவா? என்பதே அக்கேள்விக்கு விடையாகும். ஆக, த்ரிதண்டமில்லாமல் ஸந்யாஸி இருக்கக்கூடாதென்ற விதி, பொது விதியேயாகையால் அது தண்டவத் ப்ரணமாதி$_3$காலங்களில் தவிர மற்றஸமயங்களேப் பற்றியதேயாகும் என்றபடி.

(மேதி$_3$நீதலே அங்க்$_4$ரீ விந்யஸ்யந்தம்) இங்கு பூ$_4$மிதலே என்னுமல் மேதி$_3$நீதலே என்று பூ$_4$மியை மேதி$_3$நீ என்று குறிப்பிட்டருளியது – திருமால் மதுகைடபர்களேக் கொல்லும்போது அவர்கள் உடலிலிருந்த மேதஸ்ஸு (கொழுப்பு) பட்டதன் காரணமாக பூ$_4$மிக்கு மேதி$_3$நீ என்று பெயருண்டானமையால், அவர்களின் கொழுப்பினுல் பூசப்பட்டு தூய்மையிழந்த மேதி$_3$நீயானது (பூ$_4$மியானது) இப்போது மாமுனிகளின் திருவடிகளின் ஸம்ப$_3$ந்த$_4$ம் பெற்றுத் தூய்மை மிகப்பெற்றதென்று தெரிவிக்கைக்காகவாகும். 'நாதனே நரசிங்கனே நவின்றேத்துவார்கள் உழக்கிய பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே' (பெரியாழ் திரு 4–4–6) என்று ப$_4$க$_3$வத்பக்தர்களின் பாததூளிபடுதலே இவ்வுலகம் செய்த பாக்யத்தின் பயனுக அருளிச்செய்தாரிறே பெரியாழ்வார். (4)

अम्लानकोमलाकारम् आताम्रविमलाम्बरम् ।
आपीनविपुलोरस्कम् आजानुभुजभूषणम् ॥ ५

அம்லாந கோமலாகாரம் ஆதாம்ர விமலம்ப$_3$ரம்।
ஆபீந விபுலோரஸ்கம் ஆஜாநு பு$_4$ஜபூ$_4$ஷணம்॥

**பதவுரை:– அம்லாந கோமல ஆகாரம்** – வாடாக்குறிஞ்சி மலர் போல ம்ருது$_3$வான திருமேனியையுடையவரும், **ஆதாம்ர விமல அம்ப$_3$ரம்** – மிகச் சிவந்து ஶுத்தமான (காஷாய) வஸ்த்ரமணிந்தவரும், **ஆபீந விபுல உரஸ்கம்** – உயர்ந்த (முன்னுக்குவந்த) விஶாலமான திருமார்பையுடையவரும், **ஆஜாநு பு$_4$ஜ பூ$_4$ஷணம்** – முழந்தாள் வரையில் நீண்டு, திருமேனிக்கு ஆபரணம் போன்ற திருக்கைகளை யுடையவருமாகிய ...

**கருத்துரை:–**திருவடியழகை அநுப$_4$வித்துவிட்டு, இனித் திருமேனியின் மென்மையையும், ஸந்யாஸாஶ்ரமத்திற்குத் தக்க, திருப்பரிவட்டத்தின் இனிமையையும், மற்றுமுள்ள அவயவங்களின் அழகையும் அநுப$_4$விக்கிறார் இதனால்.( அம்லாந:) – வாடாக்குறிஞ்சிமலர். அது காட்டுவாகை மலர் முதலியவற்றைவிட மெத்தென்றிருக்குமாம். அம்லாந கோமலாகாரம் என்றதனால் – முன் ஶ்லோகத்தில் கூறியபடி திருவடிகள் மட்டும் ம்ருதுவானவையல்ல. திருமேனியே மெத்தென்றிருக்கும் என்று காட்டியபடி. திருவநந்தாழ்வானேயன்றோ மாமுனிகள். சிலர் அம்லாந பதத்திற்கு, காட்டுவாகைமலர் என்று பொருள் கூறினர். வஸ்த்ரத்திற்குச் சிவப்பு நிறம் துறவறத்திற்கேற்பக் காவிக்கல்லினால் ஏற்றப்பட்டது. திருப்பாற்கடல்போல் வெள்ளைவெளேரென்ற திருமேனிக்கு, சிவப்பு நிறக்காஷாயத்தினால் உண்டான பளிச்சென்று எடுத்துக்காட்டுகின்ற (பரபாக) ஶோபை. திருப்பாற்கடலுக்கு அதன்கண் உள்ள பவழங்களால் உண்டான ஶோபை போன்றுள்ளமை குறிப்பாகக் காட்டப்பட்டது. (ஆபீநவிபுலோரஸ்கம்) திருமார்பு உயர்ந்தும், விஶாலமாகவும் இருத்தல் உத்தமபுருஷலக்ஷணமாகும். (ஆஜாநுபு$_4$ஜபூ$_4$ஷணம்) இங்கு திருக்கைகள் முழந்தாளளவும் நீண்டுள்ளமை கூறியது உண்மையுரையாகும். அதனால் ஶிஷ்யர்களை க் கைகளால் பிடித்துக்கொண்டு நடந்தருளும்போது முழுந்தாளளவும் நீண்டதாகத் தென்படாவிட்டாலும் குறையில்லை என்க. அல்லது ஶிஷ்யர்களைப்பிடித்துக்கொண்டேயிருந்தால் அவர்களுக்கு ஶ்ரமமாக இருக்குமே என்று நினைத்து இடையிடையில் கைகளைத் தொங்கவிடவும் கூடுமாகையால், அச்சமயத்தில் கைகள் முழந்தாளளவும் நீண்டிருத்தல் தென்படுதலால் அது தன்னை இதனால் கூறினாரென்றலும் பொருந்தும். (5)

मृणालतन्तुसन्तानसंस्थानधवलत्विषा।
शोभितं यज्ञसूत्रेण नाभिबिम्बसनाभिना॥ ६

ம்ருணாளதந்து ஸந்தாந ஸம்ஸ்த$_2$ாந த$_4$வளத்விஷா।
ஶோபி$_4$தம் யஜ்ஞஸூத்ரேண நாபி$_4$பி$_3$ம்ப$_3$ ஸநாபி$_4$நா॥

**பதவுரை:– ம்ருணாள தந்து ஸந்தாந ஸம்ஸ்தாந தவள த்விஷா** – தாமரைத்தண்டிலுள்ள நூல்களின் திரண்ட தொடர்ச்சியினுடைய உருவம் போன்ற வெண்மையான காந்தியையுடையதும், **நாபிபிம்ப ஸநாபிநா** – வட்டவடிவமான நாபியின் ஸமான தேஶத்தையுடையதுமான (=நாபிதேஶம் வரையில் தொங்குகின்றதுமான) **யஜ்ஞஸூத்ரேண** – யஜ்ஞோபவீதத்தினால், **ஶோபிதம்** – விளங்குமவருமாகிய...

**கருத்துரை:–** திருமார்பிலுள்ள யஜ்ஞோபவீதத்தை வருணிக்கிறார் இதனால். 'புத்தம் புதிய நூல்களால்

நிருமிக்கப்பட்டதும் வெண்மைநிறமுள்ளதுமான பூணூலை அணிய வேண்டும்' என்று தத்தாத்ரேயரின் வசநம் இங்கு நினைக்கத்தகும். மேதாதிதியும் 'ஸந்யாஸிகளுக்கு யஜ்ஞோபவீதமும் பற்களும் ஜலபவித்ரமும் ஆகிய இம்மூன்றும் எப்போதும் வெண்மையாக இருக்கக்கடவன' என்று பணித்தார். 'உபவீதம் ப்ரஹ்மஸூத்ரம் ஸூத்ரம் யஜ்ஞோபவீதம் யஜ்ஞஸூத்ரம் தேவலக்ஷ்யம் என்ற ஆறும் பூணூலின் பெயர்கள்' என்றூர்கள் மகரிஷிகள்.'யஜ்ஞஸூத்ரேண' என்ற ஒருமையினுல் ஸந்யாஸிகளுக்கு மூன்றுவடம் கொண்ட ஒரு பூணூல்தான் என்பது குறிக்கப்படுகிறது. 'ஸந்யாஸிக்கு ஒரே பூணூல், ப்ரஹ்மசாரிக்கு மான்தோலுடன் கூடிய ஒரேபூணூல், க்ருஹஸ்தனுக்கும் வானப்ரஸ்தனுக்கும் (=முதுமையில் மனைவியுடன் வனம் சென்று சேர்ந்து தவம் செய்யுமவனுக்கும்) உத்தரீயத்துக்காக அணியப்படும் ஒருபூணூலுடன் சேர்ந்த இரண்டு பூணூல்கள் – அதாவது 'மூன்று' என்று வியாஸரும் பரத்வாஜரும், அறுதியிட்டனர். இங்கு ஸந்யாஸிக்கு ஒரே பூணூல் என்றது – ஒரு ஒற்றை வடத்துடன் கூடிய– மூன்று வடங்கொண்ட ஒரே பூணூல் என்றபடி). 'நாபிக்கு மேல் பூணூல் தரித்தவனுக்கு ஆயுள் குறையும், நாபியின் கீழ் தொங்கும்படி தரித்தவனுக்குத் தவம் அழியும். ஆகவே நாபியளவாகவே – அறிவுடையவன் பூணூலணியக்கடவன் என்று மஹரிஷிகள் கூறியதை இங்கு நினைக்கத்தக்கதாகும்.(6)

अम्भोजबीजमालाभिः अभिजातभुजान्तरम् ।
ऊर्ध्वपुण्ड्रैरुपश्लिष्टम् उचितस्थानलक्षणैः॥ ७

அம்பே$_4$ாஜபீ$_3$ஜமாலாபி$_4$: அபி$_4$ஜாதபு$_4$ஜாந்தரம்।
ஊர்த்$_4$வபுண்ட்$_3$ரைருபஶ்லிஷ்டம் உசிதஸ்த$_2$ாநலக்ஷணை:॥

**பதவுரை:– அம்பே$_4$ாஜ பீ$_3$ஜ மாலாபி$_4$:** – தாமரை மணிகளால் செய்யப்பட்ட மாலைகளினுல், **அபி$_4$ ஜாத பு$_4$ஜ அந்தரம்** – அலங்கரிக்கப்பட்டு அழகிய புஜங்களையும் திருமார்பையும் உடையவரும், **உசித ஸ்த$_2$ாந லக்ஷணை:** – ஶாஸ்த்ரம் விதித்ததற்கு ஏற்ற – வயிறு முதலிய இடங்களென்ன, இடைவெளியோடு கூடியுள்ளமை முதலிய லக்ஷணங்களென்ன இவற்றையுடைய, **ஊர்த்$_4$வபுண்ட்$_3$ரை:** – ஊர்த்வபுண்ட்ரங்களுடன் (கீழிருந்து மேல் நோக்கி இடப்படும் திருமண்காப்புகளுடன்) **உபஶ்லிஷ்டம்** – பொருந்தப் பெற்றவருமாகிய .....

**கருத்துரை:–** திருமார்பு அதற்கு இருவருகுமுள்ள புஜங்கள் பூணூல் நாபியாகியவற்றை வருணித்தபின்பு, திருமார்பு முதலியவற்றோடு தொடர்புகொண்ட தாமரைமணிமாலையையும் திருமண்காப்புகளையும் வருணிக்கிறூர் இதனுல். 'ஶுத்தமான தாமரை மணிமாலையையும், தோள்களில் ஒற்றிக்கொள்ளப்பட்டு அலங்காரமான சங்கு சக்கரப்பொறிகளையும், விஷ்ணுவின் பெயர்களிலாவது விஷ்ணு பக்தர்களின் பெயர்களிலாவது ஏதோ ஒன்றையும் தரிக்க வேண்டும்' என்று பரத்வாஜரும், 'பூணூலையும், குடுமியையும், திருமண்காப்புகளையும், தாமரைமணிமாலையையும், பட்டுவஸ்த்ரத்தையும், அந்தணன் தரிக்கவேண்டும்' என்று பராசரரும் பணித்தருளியவற்றை இங்கு அனுஸந்தித்தல் தகும். 'மாலாபி:' என்ற பஹுவசநத்தினுல் தாமரைமணி மாலையோடு, துளஸீ மணிமாலையையும் பட்டினுல் செய்யப்பட்ட பலநிறமுள்ள பவித்ரமாலைகளையும் கொள்க. 'கருந்துளஸிக் கட்டையினுல் செய்த மணிமாலையையும், பட்டுப்பவித்ரங்களையும், தாமரை மணிமாலையையும் எம்பெருமானுக்கு அணிவித்து, அவன் ப்ரஸாதமாகிய இம்மூன்றையும் தரிக்கவேண்டும்' என்றுள்ள ப்ராஹ்ம புராணவசநம் இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

श्रीवादिभीकरमहागुरवे नमः

१. स्तम्बेरमाचलपतेरपरावतारःश्रुत्यन्तदेशिकसुपुत्रकृपाऽऽत्तबोधः।
श्रीवत्सवंशजलधे रजनीकरस्स दुर्वादिनां भयकरो जयताच्चिरेण।।

*1.அத்திகிரிநாதனுடைய மறுஅவதாரபூதரும், வேதாந்தவாசிரியரின் நன்மகனுரான நயநவரதார்யரின் க்ருபையால் ஜ்ஞாநத்தைப் பெற்றவரும், ஸ்ரீவத்ஸவம்ஶமாகிற கடலுக்கு சந்த்ரன் போன்று மகிழ்ச்சியைத்தருபவரும், துர்வாதிகளுக்கு பயத்தை உண்டுபண்ணுபவருமான தேவரீர் வெகுகாலம் விளங்குவீராக.*

२. अभिरामवराख्यमुनीद्रकृपा प्रतिलब्धसुबोधविदीप्तियुतम् ।
परवादिभयङ्करमार्यमहं शरणं कलये भवदुःखहरम्।।

*2.அழகிய மணவாளமாமுனிகளின் க்ருபையால் பெறப்பட்ட நல்லறிவால் உண்டான புகருடன் கூடியவரும், ஸம்ஸாரமாகிற துன்பத்தைப் போக்குபவருமான ப்ரதிவாதிபயங்கரம் அண்ணவை ஶரணமாகப் பற்றுகிறேன்.*

३. सकलागमशास्त्रसदर्थनिधे ! वरयोगिवरं शरणं गतवन्! ।
वृषशैलपतिप्रवणार्यवर ! प्रतिवादिभयङ्कर! पालय माम् ।।

*3.அனைத்து ஆகமங்கள் மற்றும் ஶாஸ்த்ரங்கள் இவைகளின் நல்லர்த்தங்களுக்கு இருப்பிடமானவரே! மணவாளமாமுனிகளை ஶரணமடைந்தவரே! திருவேங்கடமுடையானிடம் ப்ராவண்யம் உடையவரே! ப்ரதிவாதிபயங்கரரே! அடியேனைக் காத்தருள்வீர்.*

४. वेदवेदान्तदुर्वादिनां दम्भहृत् ! व्यासवाङ्मधुरीरक्षणे तत्पर!
सौम्यजामातृयोगीन्द्रपादाब्जयोर्भक्तिकृत! त्वत्पदे सन्ततं चिन्तये ।।

*4.வேதத்தின் பூர்வோத்தரபாகங்களுக்கு அபார்த்தங்களைக் கூறும் துர்வாதிகளின் கர்வத்தை அபஹரிப்பவரே! வேதவ்யாஸபகவானின் வாக்காகிற ப்ரஹ்மஸூத்ரத்தின் பொருட்சுவையைக் காப்பதில் ஈடுபாடுடையவரே! அழகியமணவாளமாமுனிகளின் திருவடித்தாமரைகளில் பக்திபூண்டிருப்பவரே! தேவரீருடைய திருவடிகளை அடியேன் எப்பொழுதும் நினைக்கிறேன்.*

५.वादे नृसिंहमिश्राख्यं दुर्वादीभं जिगाय यः । वरदार्यनियोगात् तं वत्सपञ्चाननं भजे ।।

*5.யாதொருவர் தம்முடைய ஆசார்யரான வரதார்யரின் கட்டளையால் வாதத்தில் ந்ருஸிம்ஹமிஶ்ரன் என்று பெயருடைய மத்தகஜம் போன்ற மாயாவாதியை வென்றாரோ, அத்தகைய ஸ்ரீவத்ஸவம்ஶஸிம்ஹரான அண்ணவை ஸேவிக்கிறேன்.*

६.वीरनृसिंहरायाख्य(:) आन्ध्रदेशक्ष्मापतिः। यं चामान्यत सर्वं तं वन्दे वत्सविभूषणम् ।।

*6.வீரந்ருஸிம்ஹராயன் என்ற ஆந்திரதேஶபூபதி 'மாதாபிதா' இத்யாதிப்படி எவரை*

*அனைத்துமாக எண்ணினானே, அத்தகையரும் ஸ்ரீவத்ஸகுலத்திற்கு அணிகலன் போன்றவருமான அண்ணாவை வணங்குகிறேன்*

७.विद्यावृत्ताभिजात्यानां पातकानामनास्पदम् । वन्देऽहं गुर्वधीनं तं कूरनाथमिवापरम् ।।

*7.வித்யை (கல்வி) வ்ருத்தம் (ஒழுக்கம்) ஆபிஜாத்யம் (நற்குடிப்பிறப்பு) ஆகிற வஞ்சமுக்குறும்புகளுக்கு நிலமல்லாதவரும், ஆசார்யபரதந்த்ரரும், ஆகையால் மற்றொரு கூரத்தாழ்வானைப் போல் திகழ்பவருமான அண்ணாவை அடியேன் வணங்குகிறேன்.*

८.यःस्वाचार्यनियोगेन सुप्रभातादिमातनोत् । श्रीवेङ्कटाद्रिभर्तुस्तं वन्दे वादिन्द्रभीकरम्।।

*8.யாதொருவர் தம்முடைய ஆசார்யரான பெரியஜீயரின் நியமநத்தினால் திருவேங்கடமலை எம்பெருமானுக்கு ஸுப்ரபாதம், மங்களம் முதலியவைகளை அருளிச்செய்தாரே, அத்தகைய ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவை வணங்குகிறேன்.*

९.भाष्यसिंहासनारूढः वरयोगिप्रसादतः । उपादिशद्य आचार्य पौत्राय तमहं भजे ।।

*9.யாதொருவர் தம் ஆசார்யரான மணவாளமாமுனிகளின் அருளுடன் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளி அவருடைய பூர்வாஶ்ரம திருப்பேரனாரான ஜீயர்நாயனாருக்கு ஸ்ரீபாஷ்யார்த்தங்களை உபதேஶித்தாரோ, அத்தகைய அண்ணாவை ஸேவிக்கிறேன்.*

१०. स्वपुत्रान् दिव्यदेशानां कैङ्कर्येषु न्ययोजय :।
प्रेम्णा स्वयञ्च कुर्वन् ते कैङ्कर्यरतिरुज्वला।।

*10.எம்பெருமானுகந்த கைங்கர்யத்தை தானும் ப்ரேமத்தோடு செய்துகொண்டு, ஸ்வபுத்ரர்களையும் திவ்யதேஶ கைங்கர்யங்களில் நியமித்தருளினீர். இவ்வாறு கைங்கர்யத்தில் தேவரீருக்குள்ள பாரிப்பு சிறந்து விளங்காநின்றது.*

११.श्रीवैकुण्ठनभः पुर्याम् अर्चाविग्रहमास्थित ।स्वीयैराराध्यमानः श्रीवादिभीकरगुरो! जय।।

*11.ஸ்ரீவைகுந்தவிண்ணகரத்தில் அர்ச்சாவிக்ரஹத்தைப் பரிக்ரஹித்தருள்பவரே! அங்கு ஸ்வவம்ஶத்தவர்களால் ஆராதிக்கப்படுபவரே! ப்ரதிவாதிபங்கரம் அண்ணாவே! தேவரீர் பல்லாண்டு விளங்குவீராக.*

*(சென்ற மாதம் திருநாங்கூர் வைகுந்தவிண்ணகரம் அண்ணாஸந்நிதி ஸம்ப்ரோக்ஷணத்தையொட்டி, ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் விஷயமாக ஸ்ரீ.உ.வே.பரதன் ஸ்வாமி ஸமர்ப்பித்தது. மேலும் இவர், ஸுதர்ஶனர்ஸ்வாமி விஷயமாக ஸமர்ப்பித்த வைபவஶ்லோகம் பின்வருமாறு.)*

***ய: கைவல்யபுமர்த்த$_2$ தத்த்வமக$_3$த$_3$த் கைவல்யஸித்$_3$த$_4$ாஞ்ஜநே***
***யோ வை மாண புரஸ்ஸரம் நிரக்ருஷல் லக்ஷ்ம்யாஸ் ஸ்வரூபம் த்$_4$ருடம் ।***
***ய: பூர்வார்ய க்ருதீர் நிஜைர் விவரணை: ப்ராகாஶயத் ஸாது$_4$ தம்***
***க்ருஷ்ணஸ்வாமி கு$_3$ரும் ஸுத$_3$ர்ஶனஸமம் ஸேவே ஸத$_3$ா பாவநம்।।***

**Printed at R.N.R.Printers, Thandavarayan st, Chennai-5**